★ பக்கங்கள் 8    விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20  ஆவணி 9  நம்நாள்: 20  இதழ்: 195
யாழ்ப்பாணம்  வெள்ளிக்கிழமை  25-8-78

RECEIVED 1978 PERIODICALS DIVISION

★ ஆஸ்பத்திரிகளில் பணம் செலுத்தும்

# வார்ட்டுகளுக்கு கட்டணம் அடுத்தமாதம் அதிகரிக்கும்!

(கொழும்பு)

அடுத்த மாதம் 1-ந் திகதி முதல் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணம்கொடுத்து சிகிச்சை பெறும் வார்ட்டுகளின் கட்டணங்களை அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஆய்வுகூடப் பரிசோதனை, 'எக்ஸ்றே', இரத்தம் சோதித்தல், மருந்துகள், சத்திரசிகிச்சை ஆகியவற்றுக்கு இனிமேல் தனியான கட்டணம் அறவிடப்படவுள்ளன.

பணம் செலுத்தும் வார்ட்டுக்களில் தங்கியிருந்து சிகி

(8-ம் பக்கம் பார்க்க

## அரசியல் பிரமுகர் விசாரிக்கப்படலாம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியிலுள்ள முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் பொலிஸ்விசாரணைக்கு உட்படலாம் என்று தெரியவருகிறது.

அண்மைக்காலத்தில் சந்தேகத்தின்பேரில் கைதான சில இளைஞர்களிடமிருந்து முன்பு காணாமல்போன துப்பாக்கிகளும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருப்பதையடுத்தே இந்தத் திருப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

முன்பு காணாமல் போனதாகக் கருதப்படும் துப்பாக்கிகளில் 6 துப்பாக்கிகள் பொலிசாரின் கையில் சிக்கியிருப்பதாக தெரிகின்றது.

இனக்கலவரம் மீண்டும் ஏற்படாமலிருக்க

# ராணுவமுகாம், சிங்களக் குடியேற்றம், பாதுகாப்பு!

## சன்சோனிக் கமிஷன் முன் நந்தாராமதேரோ யோசனை

(கொழும்பு)

"கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி யாழ்ப்பாணத்தில் கலவரம் ஆரம்பமாகியது. அத் தினத்திற்கு முன் வெளியிடங்களில் எங்கும் கலவரம் ஏற்படவில்லை. 1958ம் ஆண்டு கலவரமும் யாழ்ப்பாணத்தில் 'ஸ்ரீ' பஸ் எரிக்கப்பட்டதையடுத்து ஆரம்பமானது. இந்த இரண்டு கலவரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்துதான் ஆரம்பமாகியுள்ளன. எனவே இனிமேலும் இம்மாதிரியான கலவரம் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களவர்களுக்கு தகுந்த படைப்பல பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும், இதற்காக யாழ்ப்பாணத்தில் ராணுவமுகாம் ஒன்று அமைக்கப்படுவது அவசியம்"

இவ்வாறு யாழ். நாகவிகாரையைச் சேர்ந்த வண. கடவத்த நாயக்க நந்தாராம தேரோ நேற்றுசன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினார்.

வண. நந்தராமதேரோ சட்டத்தரணியின் குறுக்கு விசாரணைகளுக்கு பதிலளித்தார்.

ஆகஸ்ட் கலவரங்களுக்கான காரணங்களை அவர் கூறுகையில் தேர்தல்காலத்தில் தமிழர் கூட்டணியினர் விடுத்த தமிழ்ஈழக்கோரிக்கை, திருகோணமலையைத் தமிழ் ஈழத்தின் தலைநகராக்கவேண்டுமென்றது, போன்றவையுடன் தமிழ்பிரதேசத்தின் எல்லை சிலாபம் தொடங்கி கும்புக்கன் வரையில் இருப்பதாகக் கூறியதும் சிங்கள மக்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியது என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:

1815ம் ஆண்டுவரை சண்டிய ராஜ்யத்தின் பகுதிகளாகவே திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் இருந்துவந்துள்ளன. எந்தக் காலத்திலும் தமிழ் ராஜ்யம் இப்பகுதியில் இருந்ததில்லை. 1815ல் பிரிட்டிஷார் கைக்கு ஆட்சி சென்றது. எனவே சரித்திரரீதியாக இப்பகுதிகளில் தமிழ் ராஜ்யம் இருந்ததாக சான்றுகளில்லை.

### காடையர் மூலம் தாக்குதல்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காடையர்கள் மூலம் சிங்களவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இயக்கம் நடைபெற்று வந்துள்ளது. இதற்கு காரணம் யாழ். வளாக மாணவர் மாரத்துங்கவின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் குறிப்பிடலாம். ஆனால் தமிழ்விரோத இயக்கம் எதுவும் சிங்களப் பகுதிகளில் இல்லை. பல ஆண்டுகாலமாக சிங்கள எதிர்ப்பு இயக்கம் தமிழ்ப் பகுதிகளில் இருக்கின்றது.

### பாதுகாப்பு இருந்திருந்தால்

ஆகஸ்ட் 16ம் திகதி வடக்கில் இருந்த சிங்களவர்களுக்கு ராணுவ பாதுகாப்பு இருந்திருந்தால் கலவரம் வேறு இடங்களுககுப் பரவி இருக்காது என்று வண நந்தாராம தேரோ கூறினார்.

வெளி இடங்களில் தமிழர்களுக்கு ராணுவம் பாதுகாப்பு அளித்துள்ளது என்றார். கலவரத்தின்போது யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் ஒரு நாள் மாத்திரமே இருந்தது என்றார்,

சிங்களப்பகுதிகளில் உயர் பதவிகளில் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் 99 சத விகிதமும் தமிழர்களே இருக்கிறார்கள் என்றார். யாழ்ப்பாணத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று எம்பிலிப்பிட்டியாவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 676-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

18 Z 0862

ரூபா 1,000,00

2-வது பரிசு:

22 X 0888

ரூபா 40,000

3-வது பரிசு

07 N 0863

ரூபா 10, 000

தலா ரூபா 1880.30 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 04 A 0094 | 31 A 0096 |
| 21 A 0200 | 23 B 0674 |
| 04 B 0438 | 20 B 0979 |
| 18 B 0811 | 26 B 0601 |
| 20 C 0266 | 02 C 0501 |
| 09 C 0565 | 28 C 0004 |
| 18 D 0840 | 21 D 0564 |
| 04 D 0277 | 26 D 0686 |
| 04 D 0695 | 36 D 0330 |
| 18 E 0171 | 08 E 0512 |
| 30 E 0499 | 11 E 0437 |
| 13 F 0995 | 25 G 0720 |
| 34 G 0257 | 16 G 0093 |
| 32 H 0761 | 33 H 0659 |
| 12 H 0737 | 18 J 0226 |
| 25 J 0442 | 23 J 0421 |
| 32 J 0076 | 07 J 0212 |
| 11 K 0918 | 14 K 0980 |
| 15 K 0918 | 03 K 0710 |
| 24 L 0481 | 08 L 0329 |
| 33 L 0338 | 08 M 0875 |
| 20 M 0796 | 13 M 0884 |
| 12 M 0332 | 29 N 0435 |
| 22 N 0574 | 11 N 0931 |
| 24 O 0130 | 06 O 0860 |

[8-ம் பக்கம் பார்க்க]

## சாந்தி சினிமாவில் இன்று திரைப்பட விழா

### கலாசார அமைச்சர் திறந்து வைப்பார் யோகேஸ் கலந்து கொள்வார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கலாச்சார மன்றத்தின் அனுசரணையுடன் இன்று யாழ். சாந்தி படமாளிகையில் ஆரம்பமாகும் திரைப்படவிழாவை, இன்று மாலை தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. டி.பி. விஜேதுங்க ஆரம்பித்துவைப்பார்.

இவ்விழாவில், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வே. யோகேஸ்வரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ, மற்றும் கலாச்சார மன்றத்தினர் கலந்து கொள்வார்கள்.

அமைச்சர் இன்று மண்டதீவு உப-அஞ்சல் நிலையத்திற்கும், யாழ். வளாகத்திற்கும், கந்தரோடை புதைத

(8-ம் பக்கம் பார்க்க)

## 25 கூட்டம் தவில் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இன்று முதன்முறையாக சிறுபான்மை தமிழர்களது ஆலயம் ஒன்றில் நாதஸ்வர தவில்கச்சேரி நடைபெறவிருக்கிறது.

சங்கானைப் பகுதியைச் சேர்ந்த நிற்சாமம் வைரவர் ஆலயத்தில் இன்று 25 கூட்டம் தவில் ஒரே இடத்தில் நடைபெறும்.

இதன்மூலம் சிறுபான்மை தமிழர்கள் பல ஆண்டுகளாக விடுத்த கோரிக்கை நிறைவேறுகிறது.

## 'இது பொய்த்துவக்கல்ல' என்று குண்டுகளைக் காட்டிக் கொள்ளை!

### சைக்கிளில் வந்த இளைஞர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்க வந்தவர்கள் துப்பாக்கியைக்கழட்டி குண்டுகளைக் காட்டி இது பொய்த்துவக்கல்ல. என்று கூறிவிட்டு 681 ரூபாவைக் கொள்ளையடித்துச்சென்றனராம்.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கோண்டாவில் குமரகோட்டம் கிளையில் இக் கொள்ளைச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4-30 மணியளவில் நடந்துள்ளது,

சம்பவம் நடந்தபோது கிளை முகாமையாளர் தேவதாஸ், விற்பனையாளர் பிரேமராசா ஆகியோர் அங்கு இருந்தார்

(8-ம் பக்கம் பார்க்க]

## சுதுமலையில் இன்று நடராஜன் கிளாரினற் கச்சேரி

(யாழ்பபாணம்)

கிளாரினற் சக்கரவர்த்தி திரு. ஏ. கே. வி. நடராஜன் குழுவினரின் கிளாரினற் கச்சேரி இன்று சுதுமலையில் நடைபெறுகிறது.

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஸ்ரீ ஞானவைரவர் கோவில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேக நிறைவு விழாவில் இவர்கள் கச்சேரி இன்று வெள்ளிக்கிழமை மாலை இடம் பெறும்.

இசை ஞானவாரி திரு. என். சுந்தரலிங்கம், திரு. ஜி.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வைரமுள்ள தறித்த தென்னை மரங்கள். துலாவிற்கு உபயோகிக்கக்கூடியது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நடேசர் கோவில், கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம். 0142

நல்ல இன 'கிறேப்ஸ்' கன்றுகள் விற்பனைக்குண்டு. கிடைக்குமிடம்: 'அண்ணை பாம்', ஸ்ரேசன் வீதி, இணுவில், 0144

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தில். நெடும்பனையில் உள்ள கல்வீடும் வளவும், சோனகன் தோட்டத்திலுள்ள நெற்காணியும், துணியன்காட்டுப் டனங்காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். தங்கவேல், 23, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 0114

### தேவை

கொழும்பில் பணியாற்றும் ஆசிரியர் (வர்த்தக பட்டம் பெற்றப்பட்ட) யாழ்ப்பாணத்திற்கு வரவும். மட்டக்களப்பில் பணியாற்றும் (வர்த்தக க. பொ. த.) சிரி பப்பாணம் அல்லது கொழும்பு செல்லவும் விரும்புகிறார்கள். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 0140, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0140

யாழ்ப்பாண, றோயல் டிஸ்பென்சறிக்கு இரவுக் வலாளி உடன் தேவை. தேல் வரவும். 0126

சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக நல்ல நிலையில் உள்ள மொறிஸ் ஒக்ஸ்போட். வாங்கவிரும்பும் ஆகக்கூடிய விலையை அறுவிக்கவும். வியாழன், வெள்ளி, சனி நாட்களில் பார்வையிடலாம். 21, ஆசீர்வாதம் லேன், யாழ்ப்பாணம். 0124

### சேவை

அண்ணை கோப்பி, அண்ணை தேயிலை, அண்ணை பற்பொடி, சோயாற்றின் போன்ற எமது உற்பத்திப் பொருட்களின் வெற்றுப் பைக்கட்டுகளை நல்லூரில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் கொடுத்து இனம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் அண்ணை தொழிலக, இணுவில். 0143

## இன்று பரிசளிப்பு

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரிஅம்மன் கோவிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வேலணை இந்து வளர்ச்சிக் கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இன்று காலை நடைபெறவிருக்கிறது. (அ)

## புங்குடுதீவு கிராமாட்சி மன்றம் கேள்வி விளம்பரம்

புங்குடுதீவுகிராமாட்சிமன்ற விசேஷ ஆணையாளரால் பின்வரும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு/கிராம முன்னேற்ற / மகளிர் சங்கங்களிடமிருந்தும் 13-09-1978 புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வீராமலைக் கிணறு அமைத்தல்.
2. கம்பிலியன்வீதி திருத்துதல்
3. பொது நூலகக் கட்டிடம் அமைத்தல்.

பிணைப்பணமாக ரூபா 50/-ம் பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தி செவ்வாய், வியாழக்கிழமைகளில் 12-09-78 செவ்வாய் பிற்பகல் 2-30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

கே. ரி. சம்பந்தர்.
விசேஷ ஆணையாளர்,
கிராமாட்சிமன்ற,
புங்குடுதீவு.

கிராமாட்சிமன்ற அலுவலகம்,
புங்குடுதீவு,
23-08-78. 0137

## தத்துவ சாதனத்தை அழித்து ஒழித்தல்

இல. 5 லெங்கொக் செறி, செறி பார்க், ஈப்போ, பெருக், மலேசியாவைச் சேர்ந்த தற்சமயம் இல. 46, சிவன் பண்ணை றோட்டு, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கயிலாசம் நாகராசா பெண் ஸ்ரீமதி சிவபாக்கியம் அல்லது ஸ்ரீமதி ஆகிய நான், இல. 23 சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரவேலு சிற்றம்பலம் என்பவருக்கு எனது சார்பாக ஸ்ரீலங்காவில் தத்துவகாரனை இயங்குவதற்கு கொடுத்த தத்துவ சாதனத்தை அழித்து ஒழித்து விட்டேனென்றும் குறித்த கதிரவேலு சிற்றம்பலம் இன்றிலிருந்து எனது தத்துவகாரன் ஆகிய அதிகாரத்திலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார் என்றும் இத்தால் பொதுமக்கள் சகலருக்கும் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன்.

ஸ்ரீமதி சிவபாக்கியம்
இல. 46, சிவன்டண்ணை றோட்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

0141

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சாலஞ்சென்ற நாகலிங்கம் தம்பு என்பவரின் மரண சாதனமில்லாத சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் நாகலிங்கம் தம்பு கைம்பெண் சரஸ்வதிப்பிள்ளை லோட்டஸ்றோட்டு, வண்ணார்பண்ணை வடமேற்கு யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/3385

எதிராக

1. தம்பு பொன்னம்பலம் பெரியதம்பிரான் கோவிலடி, வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்.
2. தம்பு நாகராசா இல 181. விசுவமடு இளைஞர் குடியேற்றத் திட்டம், விசுவமடு.
3. தம்பு அருமத்துரை இல. 36/4, லோட்டஸ் றோட்டு, வண்ணார் பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்.
4. கந்தசாமி தவகுணபாலநாதனும் பெண்
5. மகிழம்மாவும் இருவரும் இல. 36/4, லோட்டஸ் றோட்டு, வண்ணார் பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்.
6. நாகலிங்கம் அனளானந்தசிங்கமும் பெண்
7. இராசமலரும் இருவரும் இல. 56, லோட்டஸ் றோட்டு ஆனைக் கோட்டை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள் ஆர் எவரும் 1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எட்டாந்நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்சட்டளைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

தயாரித்தது:
பொ. நவரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
0092

# "கூட்டணியினரின் பேச்சு இன்று மாறி ஒலிக்கிறது"

## த.கா.வாலிபமுன்னணிக்கருத்தரங்கில் குமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தேர்தல் காலத்தில் இருந்த நிலைமையிலும் பார்க்க இன்று நூற்றுக்கு நூறுவீதம் மாறிவிட்டனர். தேர்தலின் போது முதலில் தமிழ் ஈழம் அதன் பின்னரே பொருளாதாரம் என்று கூறிய கூட்டணியினர் இன்று முதலில் பொருளாதாரம் தான் முக்கியம் என்று கூறிவருகிறார்கள்."

யாழ்ப்பாணம், அத்தியடியில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கருத்தரங்கில் பேசிய வாலிப முன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. மார்க்கண்டு தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"தேர்தல் காலத்தின் போது நான் முதலில் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்து வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து உணவிலும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களிலும் தன்னிறைவு கண்ட பின்னரே தமிழ்ஈழத்தை அமைக்கவேண்டும் என்று கூறினேன். அப்போது தமிழ் ஈழத்தை அமைத்த பின் பொருளாதாரத்தை வளர்ப்போம் எனக் கூட்டணியினர் கூறினர். மக்கள் அவர்களை பெரும்பான்மைப் பலத்துடன் தெரிவு செய்தார்கள். தேர்தல் முடிந்து ஒரு வருடத்திற்குப் பின் இன்று பொருளாதாரம் தான் முதலில் வேண்டும் என்று கூட்டணியினர் கூறி வருகின்றனர்

### புதிய கூக்குரல் ஏன்?

தமிழ் ஈழம் அமைப்பதற்கு தமிழ் மக்கள் ஒப்படைத்த பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்காகவே இன்று பொருளாதாரம் என்ற புதிய கூச்சுரலை எழுப்பி வருகின்றனர். கடந்த கால நூற்றுண்டாக இல்லாத பொருளாதார அக்கறை இன்று திடீரென்று எப்படி ஏற்பட்டது? 56-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒழுகுழுவாக ஆட்சிமன்றம் சென்றவர்கள் கடந்த 20 வருட காலத்தில் பொருளாதாரத்துறையில்

(8-ம் பக்கம் பார்க்க)

## ரூ.50குற்றப்பணம் செலுத்த உத்தரவு

(வேலணை)

உத்தரவுப்பத்திரமின்றி கள் எடுத்துச் சென்ற கள்ளுத் தவறணைப் பொறுப்பதிகாரி ஒருவருவருக்கு ஊர்காவற்றுறை நீதவான் 50 ரூபா குற்றப்பணம் கட்டும்படி தீர்ப்பளித்துள்ளார்.

மேற்படி கள்ளுக் கடத்தியவர் போத்தல் கள்ளை ஒரு பிளாஸ்டிக் பரலில் எழுவைதீவிற்கு கடத்திச் செல்வதாக ஊர்காவற்றுறையில் உள்ள கலால் பகுதியினருக்கு தகவல் கிடைக்கவே உடனடியாக கலால் பகுதியைச் சேர்ந்த திரு. இராசரத்தினம் தலைமையில் சென்ற கோஷ்டியின ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் வைத்து மேற்படி 30 போத்தல் கள்ளுடன் அடங்கிய பிளாஸ்டிக் பரலையும் கைப்பற்றி வழக்கும் தாக்கல் செய்தனர்.

"கிமு சங்க அலுவலர்கள்

# செயல்பட முடியாவிட்டால் பதவி விலகவேண்டும்"

**- சாவலூர் எம். பி.**

(வேலணை)

"தொகுதியில் உள்ள கிராம முன்னேற்றச் சங்க அலுவலர்கள் யாவருமே பெயர் அளவில் மட்டும் இயங்காமல் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்பட முடியாதவர்கள் பதவிகளை விட்டு விலகுவதுதான் சிறந்த வழியாகும்" என்று வேலணைசரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு என். பி. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற ஊர்காவற்றுறைத் தொகுதியின் 2வது இணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய காவலூர் தொகுதி தே பே. உறுப்பினர் கா பொ. இரத்தினம் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், தொகுதிகளில் மேற்கொள்ளப்படும் அரசாங்க வேலைகளை இயலுமானவரை கிராம முன்னேற்றச் சங்கங்களிடமே ஒப்படைக்கவேண்டுமென அரசாங்கம் சிபார்சு செய்துள்ளதால் சம்பந்தப்பட்ட சங்கங்கள் இவ்வேலைகளை ஏற்றுச் சிறந்த முறையில் உரிய காலத்தில் அவற்றை நிறைவேற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த இணைப்புக்குழுக் கூட்டத்தில் கடந்த ஜூன் 1ம் திகதி கூட்டப்பட்ட முதல் இணைப்புக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவும் செயல்பட்டனவா என்பதுபற்றி ஆராயப்பட்டதைத் தொடர்ந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இப் பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேலைகளின் முன்னேற்றம்பற்றியும் முக்கியமாக ஆராயப்பட்டது. இவ் வருடத்திற்குள் முன் ஒதுக்கியநிலையில் உள்ள வேலைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று பண்டிதர் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தக்கூடிய இடங்களில் கள்ளுத் தவறணைகளை அமைக்கக் கூடாதென்றும், எனவே பொதுமக்களும் கள்ளுச் சங்கத்தின் பிரதிநிதிகளும் இணைந்து ஆலோசித்ததன்பின் எடுக்கும் இடத்திலேயே கள்ளுத் தவறணைகளை நிறுவ வேண்டுமெனவும் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

அனலைதீ, எழுவைதீவு போன்ற இடங்களுக்குச் செல்லும் சுகாதார வைத்திய அதிகாரி அங்குள்ள மக்களின் வசதிக்கேற்றமுறையில் அவர் செல்லும் நேரத்தை மாற்றியமைக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. (அ)

# மயிலிட்டி மீன்பிடித்துறைமுக வேலைகள் முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேலைத்தலத்தின் பொறுப்பதிகாரியாக திரு. எல். லலித் பெர்ணன்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. லலித் பெர்ணண்டோவின் தீவிர முயற்சியினால் முதலாம் கட்ட வேலைகள், அடுத்த 2 மாத காலத்தில் பூர்த்தியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் மாதங்களில் காலநிலை மாறக்கூடிதாகவிருப்பினும், குறிப்பிட்ட காலத்தில் வேலைகளைப் பூர்த்தியாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன மேலும் கூட்டுத்தாபன பாதுகாப்புப்பகுதியையும் பாதுகாப்பு அதிகாரி திரு. எம் ஜெகநாதன் பலப்படுத்தியுள்ளார். (க-ஈ)

## யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

### கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் ஓடுகளும் பாவித்த சகல லொறி அளவுகளிலும் உள்ள லொறி ரயர்களும் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

விண்ணப்ப முடிவுத் திகதி: 5-09-'78.

ரூபா 50/- வைப்புப் பணம் கட்டியவர்களின் கேள்வி விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுக்கப்படும். மேலதிக விபரங்களை சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதில் பொதுமுகாமையாளர்.

74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978ஆகஸ்ட் 23. 0138

## கலைப்பெருமன்றம் - புங்குடுதீவு

### முதலாவது ஆண்டுவிழா

கடந்த ஆண்டில் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அம்பலவாணர் அரங்கில் நாளை (26-8-78) சனிக்கிழமை மாலை ஆண்டுவிழா நடைபெறுகிறது.

இணைச் செயலாளர்கள்.
0146

ஈழநாடு
The Eelanaadu

# ஷஷ்டியாப்த பூர்த்திகாணும் நிறுவனம்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் தனது அறுபதாவது ஆண்டுநிறைவு விழாவைக் கொண்டாடுகிறது. ஷஷ்டியாப்த பூர்த்தி விழாக் கொண்டாடும் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் வளர்ச்சி கண்டு அந்தச் சங்கத்தினர் மட்டுமல்ல, நாமும் பெருமைப்படுகிறோம். இந்த நாடும் பெருமையடைகிறது.

வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் கால்ஊன்றி வளர்வதற்கு முன்னர் அத்தியாவசியப் பொருள்களையும் மற்றும் பொருள்களையும் பெறுவதில் யாழ்ப்பாணப்பகுதி மக்கள் பெரிதும் சிரமமடைந்தனர். இப்பொருள்களை நியாயமான விலைகளில் தட்டுப்பாடின்றிச் சகலமக்களுக்கும் கிடைப்பதற்கான ஒரு நிறுவனம் இங்குஇல்லை என்ற குறையை உணர்ந்துகொண்ட சில பெரியார்கள் சேர்ந்து ''யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்'' என்ற பெயரில் இந்த நிறுவனத்தைஉருவாக்கினர். தட்டுப்பாடாக உள்ள பொருள்களும் மற்றும் மக்களுக்குத் தேவையான பொருள்களும் நியாயமானவிலையில் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் அதன் கிளைஸ்தாபனங்களிலும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அந்த ஸ்தாபனம் தனது சேவை மூலம் ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களாயினும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களாயினும் கொள்வனவுகொடுப்பனவு சரியான முறையில் இருந்தால்தான் நாட்டின் பொருள்களின் உற்பத்தியும் அதிகரிக்கும் பொது மக்களும் பொருள்களைத் தட்டுப்பாடின்றி வாங்கி பயனடைக்க முடியும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மட்டுமல்ல காய்கறிகள் உட்பட சகல பொருள்களையும் நிதானமான - நியாயமான விலைகளில் தட்டுப்பாடான பொருளகளாயின் அவைகளைச் சமமாகப் பங்கிட்டும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்து மக்கள்மத்தியில் நற்பெயரைப் பெற்றுள்ள யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தை நிறுவியவர்களையும் அதன் வளர்ச்சிக்காக உழைத்தவர்களையும் இன்றும் உழைத்துவருபவர்களையும் நாடு என்றும் மறக்கமுடியாதென்பது உண்மை.

## நாளை கிருஷ்ணஜயந்தி

# கண்ணன் எத்தனை கண்ணனடா?

சிறந்த கண்ணை உடையவன் கண்ணன் என அழைக்கப்படுகின்றான். கண்ணனின் சிறந்த கண்கள்தான் என்ன? அவனது கையில் உள்ள குழலும் தலையில் உள்ள மயில் தோகையும் மார்பில் அசையும் மணிமாலையும் அழகிய உடையும் யாருடைய கண்களையும் கவரச் செய்கின்றன. கோபிகாப்பெண்கள் அவன் உருவத்தைக் கண்டுமயங்கினர்; ஆனால் முனிவர்கள் அவன் குழலோசையில் நாத பிரம்மத்தைக் கண்டு மயங்கினர். காத்தல் அழித்தல் ஆகிய இருதொழில்களையும் மேற்கொண்டு அவதாரம் எடுத்த விஷ்ணுவின் அவதாரமே கண்ணவதாரமாகும். துர்யோதனாதிகள் போன்ற துஷ்டருடன் கூடிய பூபாரத்தைக் குறைக்கவும் தர்மர் போன்ற சாதுக்களுடன் கூடிய நல்லோர்களைக் காப்பாற்றவும் தான் அவன் அவதாரம் எடுத்தான்.

### மாயக் கண்ணன்

யாராலும் செய்யமுடியாத அமானுஷமான காரியத்தைச் செய்து உலக மக்களுக்குத் தன் அவதாரத்தை விளங்கச் செய்தான். ஆண்டவன் மனிதனோடு மனிதனாக இருக்கும் போது நாம் ''ஆண்டவன் இவன்'' என்று உணருவதில்லை. மேலும் அவனை அசட்டையும் செய்கின்றோம். ஆனல் அமானுஷ காரியங்களை அவனே செய்தால் நாம் கண்டு வியந்து அவனுடைய தெய்வீகத்தன்மையைக் கண்டு மெய்மறந்து அடிபணிகின்றோம். மக்கள் இந்திரனுடைய கோபத்திற்காளானபோது கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தான். இது அமானுஷச் செய்கை அல்லவா. காளிங்கன் என்னும் பாம்பின் தொல்லையிலிருந்து அச்சிறுவயதில் காளிங்க் மடுவில் குதித்து அந்த சர்ப்பத்தின் அட்டகாசத்தை அடக்கி உலகமக்களைக் காப்பாற்றினன். இது அவன் செய்த இரண்டாவதுமாயச் செய்கையாகும். மூன்ருவதாக தூதுசென்றதன்னை துர்யோதனாதியர்கள் கட்டிய போது விஸ்வரூபத்தைக்காட்டி தான் மாயக்கண்ணன் என்பதை நிரூபித்தான். நான்காவதாக திரௌபதி துச்சாதனனின் வஸ்திராபகாரத்தில் கண்ணனைக் எண்ணிக்கதறிய போது முடிவற்ற நீண்ட சேலையை அவளது உடலிலிருந்து பெருகச்செய்து துச்சாதனனின் கைகள் சோர்வடையச் செய்து திரௌபதியைக் காப்பாற்றி தன்மாயத் தன்மையை விளக்கப்படுத்தினன் யசோதைக்குத் தன் வாயைத் திறந்து 14 உலகங்களையும் காட்டிய மாயக் கண்ணன் இவனே.

### வேணு கோபால கண்ணன்

தனது புல்லாங்குழல் ஓசையால் பசுக்களை மாத்திரமல்லாமல் நம்போன்ற இல்வாழ்வில் கஷ்டப்படும் பக்தர்களை எல்லாம் மெய்மறக்கச்செய்து அவன்தாள் நினைந்து மெய்மறந்திருக்கச் செய்கிருன்,

(6ம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ண ஜயந்தி நாளை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி உற்சவம் நாளை இரவு நடைபெறுகிறது.

மாலை 6-30 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகத்தை அடுத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' என்னும் பொருள் பற்றி உபந்யாசம் செயவார். தொடர்ந்து பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை கோஷ்டியினரின் சின்சிக் கச்சேரியும் நடைபெறும்

நாளை மறுதினம் மாலை உறியடியும் நடைபெறும். (இ)

# 'ஓம்' எனும் மந்திரவடிவே

## பன்னிரு சைவத் திருமுறைகள்

ஓம் எனும் பிரணவ மந்திரமே சைவசமயத்தின ஆதிப் பீடமாகவும், வேதத்தி உயிர் நாடியாகவும் விளங்குகின்றது ஓம் எனும் மந்திரத்தை இந்திய நாட்டிலுள்ள எல்லாச் சமயங்களும், புத்த, சமண சமயங்களும்கூட ஒப்புக்கொள்கின்றன. ஆளுடையபிள்ளையாராகிய சம்பந்தரும் ஓரிடத்தில் ''ஓம் என்று மறை பயில்வார் பிரமபுரத்துறைகின்ற காமன்தன் உடல் எரியக் கனல் சேர்ந்த கண்ணனே'' என்று கூறுவதிலிருந்து இதன் சிறப்பை உணரலாம். ஓங்காரத்தை விளக்க, நம் முன்னோர்கள் பற்பல உருவங்களை அமைத்திருக்கிருர்கள். மூல விநாயகரே பிரணவ உருவம் உடையவர். மேலும் கோலக் குறத்தி மணாளனுகிய முருகப் பெருமான் ஏறும் நீலமயிலும் பிரணவ உருவம் உடையதே. இதைத் திருப்புகழில் அருணகிரியார் 'ஆனதனி மந்திர ரூபநிலை கொண்ட ஆடுமயி' எனக் குறிப்பதிலிருந்து அறியக் காணலாம். ஓம் என்ற மந்திரத்தின் பொருள் காப்பாற்றுதல் எனவும் பொருள் படும்.

பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலன்

ஓம் எனும் மந்திரத்தின் முக்கியத்துவம் சாந்தோக்ய உபநிடதத்தி , கடோப உபநிடதத்திலும் நன்கு கூறப்படுவது இதன் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும். இம்மந்திரம் வேதங்களின் தொடக்கத்திலும் முடிவிலும் ஓதப்படுவதோடல்லாமலும் வேதங்கள், தவங்கள், அனுட்டானங்கள் ஆகியவற்றின் சாராம்சமும் இதுவேயாகும் கடோப உபநிடதம் குறித்துநிற்பதும் அறியப்பாலதாகும்.

சைவ வேதாகமங்களும் ஓம் எனும் பிரணவ மந்திரத்தை முதற்கொண்டே ஆரம்பிக்கின்றன. இவ்வாறே இப்பன்னிரு சைவத் திருமுறைகளும் அமைந்திருப்பதும் ஆழ்ந்து நோக்கி இன்புறப்பாலதாகும். வேதநெறி தழைக்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் திருவவதாரம் செய்தருளிய சம்பந்தர் முதலில் திருவாய் மலர்ந்தருளி இறைவனைச் சுட்டிப் பாடியருளிய 'தோடுடைய செவியன்' என்ற பதத்தில் ஓகார உயிரொலியாகிய 'ஓ' என்ற எழுத்து தொக்குநிற்கின்றது. அடுத்து, திருத்தொண்டர் வரலாற்றை விரித்துரைக்கும் பெரிய புராணத்து இறுதிப் பாடலின் இறுதிச் சொல்லாகிய ''உலகெலாம்'' எனும் பதத்திலுள்ள 'ம்' என்ற எழுத்து மகர ஒற்றில் முடிவுறுவதால் இப்பன்னிரு திருமுறைகளும் 'ஓம்' எனும் பிரணவ ரூபமாய் அமைந்திருப்பதையும் அறியக் காணலாம். மேலும் சம்பந்தரின் முதற் கூற்ருகிய 'ஓங்காரம்' சுந்தரரின் 'நமசிவாய' மந்திரமாக முடிவு பெறுகின்றது. எனவே மூவர் தமிழாகிய 'தேவாரம்' எனும் சிறப்புத் தமிழ் மறை. பிரணவம் தொடங்கி ஐந்தெழுத்தில் முடிவுறுகின்ற மந்திர நூலாக அமைந்து விளங்குவதும் நோக்கற்பாலதாகும்.

## திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வுத் தத்துவம் --3

திருமுறைகளைப் பன்னிரண்டாக வகுப்பதற்கு முன்பு தில்லையில் மறைந்துகிடந்த திருமுறைப்பனுவல்களைத் திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளால் கண்டெடுக்கப்பட்டபோது அவ் வேட்டுச் சுவடிகள் யாவும் கறையானால் மூடப்பட்டிருந்தன. இதைக்கண்டு சிந்தைநொந்து அதன்மேல் எண்ணெய் ஊற்றிக் கறையானைப் போக்கி ஏட்டை எடுத்துப் பார்த்தபோது பல பதிகங்கள் சிதைந்திருந்தன. இதைக் கண்ணுற்று மன்னன் வருந்த ''ஈண்டு வேண்டுவன வைத்தோம்'' என்று ஓர் அசரீரி வாக்கு எழ, பின்கிடைத்தனவற்றை ஒழுங்குபடுத்தி தொகுக்கப்பெற்றதே தற்போது எமக்குக் கிடைக்கப் பெற்ற திருமுறைகள்.

திருமுறைகள் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டபின் இவ்விசைப் பனுவல்களைத் தமிழ் நாடெங்கனும் முழங்கச் செய்வதற்கு முதலில் தஞ்சைப் பெரிய கோயிலில் நாற்பத்தெட்டு ஓதுவாமூர்த்திகளை அமர்த்தித் திருநெறியிசைத் தமிழைத் தமிழ்நாட்டில் தழைத்தோங்கச்செய்தான் என்றும் திருமுறைகண்ட புராணவாயிலாக அறியக்காணலாம்.

(8ம் பக்கம் பார்க்க)




## இன்று கார்த்திகைத் திருவிழா
## நல்லை முருகனை மறவாதார் இனி உலகிற் பிறவாதார்

குன்று தொறும் ஆடல் செய்யும் குறிஞ்சித் தெய்வம்
குன்றி னெடு சூர் தடிந்த குமரத் தெய்வம்
வென்றிதரு வேல்பிடித்த வெற்றித் தெய்வம்
வேதமுடன் ஆகமங்கள் விரித்த தெய்வம்
அன்று பழ முதிர்சோலை அமர்ந்த தெய்வம்
ஆறுருவும் ஒருருவாய் ஆன தெய்வம்
நன்றிவளர் நல்லையினில் வாழ்தெய்வம் தன்னை
நண்ணுவார் உலகு நலம் எண்ணுவாரே.

இந்திரர்க்குப் போகமெலாம் ஈந்த தெய்வம்
யானைமா முகர்க்கிளைய இளவல் தெய்வம்
மந்திரமும் மணிமருந்தாய் மருவும் தெய்வம்
வணங்குவார் வல்வினையை வாட்டுந் தெய்வம்
செந்தேனும் தினைமாவும் தின்ற தெய்வம்
சேவலினற் கொடியுடனே திகழும் தெய்வம்
செந்திருவாழ் நல்லையுறை தெய்வம் தன்னைச்
சிந்திப்பார் தமையமரர் வந்திப்பாரே.

அன்பினர்க்கே ஆணவத்தை அறுக்கும் தெய்வம்
அணுவுக்குள் அணுவாகி அகன்ற தெய்வம்
அன்னமொடு சொன்னத்தை அருளும் தெய்வம்
அழலாகக் கங்கையிலே அளந்த தெய்வம்
முன்னவனல் வள்ளிமணம் முடித்த தெய்வம்
மூவுலகிற் கொருமுதலாய் முந்துந் தெய்வம்
மன்னு புகழ் நல்லை வாழ் தெய்வம் தன்னை
மறவாதார் இனியுலகிற் பிறவாதாரே.

— வி. ரி. துரைசிங்கம்.



தொல்லைதரும் சுற்றம், தனக்கடங்காத மனைவி, அடக்கமில்லாத வேலையாள், அறிவற்றமகன், நஞ்சுடமை கூடிய அயலான் இவ்வைந்தும் ...ஞ்ச

## ரமலான் சிந்தனைகள்

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது;- ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கடைசிப் பத்துநாட்களில் வணக்க வழிபாட்டில் எவ்வளவு முயற்சியம் சிரத்தையும் எடுத்துக்கொள்வார்களோ, அந்த அளவுக்கு வேறு எந்த நாட்களிலும் எடுத்துக்கொண்டதில்லை. ரமலானுடைய கடைசிப் பத்துநாட்களின் பகுதி வந்துவிட்டால் பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இடுப்பை வாரிக் கட்டிக்கொள்வார்கள். (அதாவது அல்லாஹ்வை வணங்குவதிலும், திருகுர்ஆன் ஓதுவதிலும், இறைதியானத்திலும் திழைத்து விடுவார்கள்) இரவு முழுதும் விழித்திருப்பார்கள். மேலும் தங்களின் குடும்பத்தார்களான (மனைவியர் - மகளார் அடிமைகள் ஆகிய) வர்களையும் விழித்திருக்கச் செய்வார்கள்: - மிஷ்காத்.

தொகுப்பு: ஏ. ஸி. எம். மஸ்ஹூர் - யாழ்நகர்.

யாழ். மாவட்ட கலாச்சார மன்ற ஆதரவில் இன்று ஆரம்பமாகும்

# திரைப்படவிழா சிறப்புமலர்

## தேசிய திரைப்படத்தின் நோக்கம்



இலங்கையில் திரைப்படம் முப்பது ஆண்டுகள் வரலாற்றையுடையது. ஆகவே திரைப்பட வளர்ச்சி இன்னும் ஆரம்பப்பருவத்தில் இல்லையென்பதை இது காட்டுகிறது. பெயர்பெற்ற ஒருசிறு நாடகக் குழுவினால் பணபலமும் தொழில்நுட்பஅறிவும் குறைந்திருந்த வேளையிலே ஆரம்பிக்கப்பட்ட சினிமாத்துறை கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் பெருவளர்ச்சி அடைந்துள்ளது.

தொழில்நுட்பமும் பரிவர்த்தனைகளும் மிகவும் வளர்ச்சியடைந்த ஒரு கால எல்லையுள் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். பல மக்களுக்கிடையே கொள்கைகளும், எண்ணச் சிதறல்களும் உன்னிப்பாகவும், பரவலாகவும் வளர்ந்துகொண்டிருக்கும் காலமிது. தகவல்கள் விரைவாகப் பரிமாறப்படுவதனால் உலகில் பல்வேறு மக்களுக்கிடையேயுள்ள தூரம் இன்று குறுகிவிட்டது. மேலைத் தேசத்திலே சினிமாத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப, நுணுக்க முன்னேற்றங்கள் வெகு எளிதில் எமக்கு இன்று கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. இது ஒரு புறமிருக்க, சினிமாத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின்து வளர்ச்சியடைந்த கலா அனுபவங்கள் மிக எளிதில் இன்று எமக்குக்கிடைக்கிறது. ஆகவே இலங்கையிலுள்ள நாம் தரங்குறைந்த திரைப்படங்களைத் தயாரிக்கத் தூண்டுகோலாகவோ அல்லது அவ்வாறன திரைப்படங்களைப் பார்ப்பதற்கு பொதுமக்களுக்கு ஊக்கத்தினையோ அளிப்போமாயின் கலைத்துறையில் வளர்ச்சியடைந்த முதுபெரும் கலைஞர்களே அப்பெருங்குறையைப் பொறுப்பேற்கவேண்டும். ஆகவேதான் சினிமாத்துறை வளர்ச்சி ஆரம்பகாலத்தைத் தாண்டிவிட்டது என நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

கலையின் தரத்தைத் தரம் பிரித்து எடைபோடவல்ல கலைப்புலமையுடைய பெரியோர் சிறந்த கலைக்கும் குறைந்த கலைக்கும் வேறுபாடு கண்டு மக்களுக்குச் சிறந்த கலையை வழங்கும் முக்கிய பொறுப்பை ஏற்க வேண்டும். சினிமாவில் காலடி எடுத்து வைக்கும் புதுத் தலைமுறையினருக்கு அவர்கள் வழிகாட்டிகளாக அமையவேண்டும். பெரியவர்கள் தரும் எல்லாம் சிறந்தனவே என்ற ஒரு தப்பபிப்பிராயம் இளந் தலைமுறையினரிடையே நிலவக் கூடும். அவர்கள் கொடுப்பது இத்தலைமுறையினரின் கலைத்தாகத்தைத் தீர்க்கவல்லதாக இருக்காமற் போகக்கூடும். மிகவும் தரங்குறைந்த காதற் கதைகளை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படங்களையே நாம் நீண்ட காலமாக வெள்ளித் திரைகளிலே பார்த்து வருகிறோம்.

அண்மைக்காலங்களில் அடிபட்ட இந்தப் பாணியி

]8-ம் பக்கம் பார்க்க]

- லயனல் பெர்ணண்டோ -

(யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட கலாச்சாரமன்றத் தலைவரும்)

## கலை,கலாச்சாரபண்பாட்டுக்குழு திரைப்படவிழா அவசியம்

(நமது நிருபர் "யோகி")

உலகநாடுகள், தங்கள் நாட்டின் கலை, கலாச்சாரம் பண்பாட்டைப் பிரதிபலிப்பதற்கு திரைப்படவிழாக்களை நடாத்தி வருகின்றன. இதே போல் இந்நாட்டு சிங்கள, தமிழ் கலை, கலரச்சாரம்.பண்பாடுகளைப் பிரதிபலிப்பதற்கும், வெளிநாட்டவரின் கலை, கலாச்சாரத்தை நாம் அறிவதற்கும் யாழ்ப்பாண திரைப்படவிழாவை யாழ்ப்பாண மாவட்ட கலாச்சார மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

யாழ். மாவட்ட கலாச்சார மன்றத்தலைவரான யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ மற்றும் கலாச்சார மன்றத்தினரின் தீவிர முயற்சியினால் இத்திரைப்படவிழா நடைபெறுகிறது.

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. விஜேதுங்கா,யாழ்ப்பாணம் சாந்தி படமாளிகையில் இன்றுகாலை இத்திரைப்படவிழாவை ஆரம்பித்து வைப்பார். யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இவ்விழாவில் கலந்து கொள்வார்.

இலங்கையில் தமிழ் திரைப்படத்துறை வளர்ச்சியடைந்து வருவதற்கு அறிகுறியாக தற்போது பதினைந்துக்கு மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சிங்களத் திரைப்படத்துறை ஓரளவு வளர்ச்சியடைந்து இன்று முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் திரைபபடங்களுக்கு சிங்களத் தொழில்நுட்பவியலாளர்களும், சிங்களத் திரைப்படங்களுக்கு தமிழ் தொழில்நுட்பவியலாளர்களும் பூரண ஒத்துழைப்புக்கொடுத்து, ஈழத்தில் திரைப்படத்துறையை முன்னுக்குக் கொண்டுவருவது; தேசிய ஐக்கியத்தையும், நல்லெண்ணத்தையும் வளர்க்கக் கூடியதொன்றாகும். இதே போன்று தமிழ், சிங்கள,ஆங்கிலப் படங்களைக்கொண்ட திரைப்படவிழாக்களை தென்னிலங்கையிலும் நடாத்துவதன்மூலம் தேசிய ஐக்கியத்திற்கு வழிகோலமுடியும். இதற்கு யாழ். மாவட்ட கலாச்சார மன்றம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்வது வேண்டிய தொன்றாகும்.

இன்று ஆரம்பமாகும் திரைப்படவிழாவில் ஈழத்தில் தயாரான இரு தமிழ்ப் படங்களும், மூன்று சிங்களப்படங்களும், இரண்டு ஆங்கிலப் படங்களும் இடம்பெற்றுள்ளன.

இத்திரைப்படவிழா மூலம் கிடைக்கும்நிதி இப்பகுதியில் வாழும் ஏழைக்கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும், அவர்களின் திறமையை வெளியுலகு அறிவதற்கான வழிவகைசெய்வதற்கும் மற்றும் கலாச்சாரத் தொடர்பான விஷயங்களுக்கும் பயன்படுத்தப்படவிருக்கிறது. இதனை வரவேற்க வேண்டியதாகும்.

## கலைத்தாகத்துக்கு ஒருவிழா

கலையின் தராதரம் குன்றிக் கொண்டு செல்லும் இவ் வேளையில், கலைத்திறனுடைய பலதரப்பட்ட படங்களை இங்குகொண்டுவந்து, திரைப்படவிழா இடம் பெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எமது நாட்டிலே புதிய உத்திகளைக் கையாண்டு எமது கலைஞர் உடன் எம்முயற்சியினால் ஆக்கப்படும் திரைப்படங்களுக்கு நாம் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும்.

நல்ல கதையமைப்பு மட்டுமன்றி, கலையமைப்பு, படப்பிடிப்பு ஒலி, ஒளி எல்லாமே சிறந்த திரைப்படத்திற்கு இன்றியமையாதவை என்பதனை நாம் மறந்துவிடலாகாது. கலைத்தாகம் கொண்டிருப்போருக்கு இத்திரைப்படவிழா வரவேற்கத்தக்கதாகும்.

வெ- யோகேஸ்வரன்
யாழ்.தேசியப் பேரவை உறுப்பினர்.
யாழ்ப்பாணம்,


நம் நாட்டுக் கலைகள் வளர வாழ்த்துகின்றோம்




ஒரு கட்டியின் விலை 60 சதம் மட்டுமே

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம் வர
வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா!
நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்
மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச் சேகரித்து
சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிலகம், யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாண திரைப்படவிழா

யாழ்ப்பாண மாவட்ட கலாச்சார மன்றத்தின்அனுசரணையுடன் யாழ்ப்பாணம் சாந்தி படமாளிகையில் நடைபெறும் யாழ்ப்பாண திரைப்பட விழாவை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி. விஜேதுங்கா, இன்று ஆரம்பித்துவைப்பார்.

இன்று ஆரம்பமாகும் திரைப்படவிழா, இம்மாதம் 31ந் திகதிவரை தினமும், காலை 10-30 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கும், மாலை 6-30 மணிக்கு பொது மக்களுக்கும் நடைபெறும்.

### திரைப்படங்கள்

25- பொன்மணி
26- மடொல் துவ
27- த கிரேட் பரியர் ரீவ்
28- தாஹகின் எக்கெக்
29- வாடைக்காற்று
30- ரோமியோ ஜூலியட்- அன்டாக்னஸ்
31- துங்மங் ஹந்திய

## தகவல் ஒலிபரப்பு அமைச்சரின் செய்தி.

யாழ். மாவட்டக் கலாச்சார மன்றத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் திரைப்பட விழாவை முன்னிட்டுப் பிரசுரிக்கப்படும் 'ஈழநாடு சிறப்பு மலருக்கு' இந்த முக்கிய செய்தியை அனுப்புவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சில முக்கிய காரணங்களுக்காக இத்திரைப்படவிழா மிக அத்தியாவசியமானதாக நான் கருதுகிறேன்.

(8-ம் பக்கம் பார்க்க)


## நல்வாழ்த்துக்கள்



யாழ்ப்பாண மாவட்ட கலாச்சார மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெறும் யாழ்ப்பாண திரைப்படவிழா வெற்றி பெற எனது உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

திரு. எஸ். தியாகராசா
அதிபர்
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
யாழ்ப்பாணம்.

With The Best Compliments of

| | |
|---|---|
| Cey-Nor<br>Boat Yard<br>Karainagar<br>Phone : 804 | சீ-நோர்<br>படகு உற்பத்திச்சாலை<br>காரைநகர்<br>போன் : 804 |
| Fishing Net Factory<br>Gurunagar<br>Jaffna<br>Phone : 7604 | வலைத் தொழிற்சாலை<br>குருநகர்<br>யாழ்ப்பாணம்<br>போன் : 7604 |
| ● Manufacturers of Fibre Glass Ferrocement Boats and Fishing Nets | கண்ணாடிநார் மீன்பிடி படகுகள்<br>சீமேந்து ஆழ்கடல் மீன்பிடி படகுகள்<br>நைலோன் குறுலோன் வலை உற்பத்தியாளர்கள் |
| ● Exporters of Marine Product | கடல் உற்பத்திப்பொருள் ஏற்றுமதியாளர்கள் |
| ● Importers & Distributors of : All sizes of Kurulon Ropes | குறுலோன் கயிறுகள் இறக்குமதி விநியோகஸ்தர்கள் |
| ● Also Suppliers Frozen Fish | குளிரூட்டிய மீன் விநியோகஸ்தர்கள் |

# யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

ஸ்தாபிதம்: 26-8-18

# ஷஸ்டியப்த பூர்த்தி 25-8-78 (1918-1978)

## வர்த்தக வட்டத்தில் 60 வருட சேவை



வைத்தியகலாநிதி
- க. கனகரத்தினம் -
(தலைவர்)

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம் கடந்த அறுபது வருடங்களாக இலங்கை வர்த்தக வட்டத்தில் ஒரு நேர்மையான நிறுவனமாகத் திகழ்வது எம் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி அளிக்கின்றது.

எமது ஸ்தாபனம் ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக இயங்குவதால் பெறும் பலாபலன்கள் சில சாதகமானதாகவும் வேறுசில சாதகமற்றதாகவும் இருப்பது இயற்கையே.

அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லாததால் ஒரு சில அதிகாரிகளின் கெடுபிடிகளுக்குள்ளாகாமல் எமக்கே உரித்தான வழிகளிற் செயற்பட்டு வருகின்றது. அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சில ஸ்தாபனங்களில் இருந்து விலை உயர்ந்த பாவனைப் பொருள்கள் பொதுமக்களைச் சென்றடையாது தனிநபர் சிலர் அவற்றை அபகரித்துவிட்டு களவுபோனதாக விளம்பரம் செய்து தாம் தப்பிக்கொள்ளும் சம்பவங்கள் அனைவரும் அறிந்ததே. ஆனல் நாம் நேர்மையுடனும், சீரான முறையிலும் விநியோகம் செய்துவருவதை சென்ற அரசாங்கத்திற்கு பலமுறை எடுத்துக் கூறியும் அது அவர்கள் கவனத்தை ஈர்க்கவில்லை. தற்போதய அரசாங்கம் எமது சேவையை உணர்ந்து எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்காக ஆவன செய்யுமென எதிர்பார்க்கின்றோம்.

இந்த ஸ்தாபனத்தின் முதலாவது முகாமையாளராகக் காலஞ்சென்ற திரு. வி. ஆறுமுகம்பிள்ளை விளங்கினர். இந்த ஸ்தாபனத்தைக் கூட்டுறவு ரீதியில் அமைக்க வேண்டுமென்ற ஆவல்கொண்டிருந்த இவர் இதன் ஸ்தாபன இயக்குநர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார்

''தன்னலமற்ற சேவை'' என்ற இலட்சியத்துடன் நியாயமான விலைகளில் சீரான விநியோகம் என்பதே இதை நிறுவியவர்களின் இலக்காகவிருந்தது. இந்த இலட்சியப் பாதையிலிருந்து நாம் இன்றுவரை விலகியது கிடையாது என்பதில் பெருமைகொள்கின்றோம்.

சிலவருடங்களின் பின் திரு. ச. குலசிங்கம் அவர்களின் சேவையை ஸ்தாபனம் பெற்றது. இந்த ஸ்தாபனம் நிலைத்து இருக்கும்வரை அவரது சேவையின் புகழ் நிலைத்து நிற்கும் என்ருல் அது மிகை

(7ம் பக்கம் பார்க்க)

## மக்கள் சேவையில் யா.ஐ.வி. சங்கம்

1918-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்த சில பிரமுகர்கள் கூட்டுறவு முறையில் ஒரு வியாபார ஸ்தாபனத்தை நிறுவ விரும்பினர். இந்த நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதே யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கமாகும். பலரும் தவருகப் புரிந்துகொள்வதுபோல, பல்வேறு காரணங்களுக்காக, எமது ஸ்தாபனம் கூட்டுறவுச்சங்கச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படவில்லை: அதற்கு மாருக இலங்கைக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கம்பனியாகவே பதிவு செய்யப்பட்டது.

எவ்வாருயினும் தனிநபர் எவரும் ஆதிக்கம் செலுத்த முடியாதவகையில் ஒருவர் வைத்திருக்கக்கூடிய ஆகக்கூடுதலான பங்கு இருநூருக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் முதல் பத்துப் பங்குகளுக்கும்பங்கு ஒன்றிற்குஒன்று என்ற வாக்கும்,அதற்குமேல் மேலதிகமான ஒவ்வொரு ஐந்து பங்கிற்கும் ஒரு வாக்கு என்ற அடிப்படையில் நூறு பங்கு வரைக்கும் வாக்குகள் உண்டு. அதற்கு மேல் ஒவ்வொரு பத்துப்பங்கிற்கும் மேலதிகமாக ஒவ்வொரு வாக்கு உண்டு. இதன் பிரகாரம் ஆகக்கூடுதலான இருநூறு பங்குகளை உடைய ஒருவருக்கு முப்பத்தியெட்டு வாக்குகளே உண்டு.

1918-ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ம் திகதி காலஞ்சென்ற திரு. வீ. ஆறுமுகம்பிள்ளைக்குச் சொந்தமான கட்டிடத்தில் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் ஆறு தொழிலாளர்கள் கடமையாற்றினர். இன்று இருநூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

ஸ்தாபனத்தின் ஆரம்ப வருடங்களில்நல்லஇலாபம்கிடைக்கப்பெற்றது. அச்சமயம் நேர்வரி மறைமுகமான வரிகள் மிகக்குறைவாக இருந்ததே இதற்குக் காரணம். 1932-ம் ஆண்டுவரை வருமானவரிக் கொடுப்பனவு இல்லாதது குறிப்பிடத் தக்கதொன்ருகும். இதன் காரணமாக 20, 24, 36 வீதம்வரை பங்கு இலாபம் கொடுக்கப்பட்டது.

ஸ்தாபனத்தின் பிரதான வியாபாரம் அரிசி, நெல்லு, தானியங்கள், தவிடு என்ற நிலை ஆரம்பத்தில் இருந்தது. காலம் செல்லச்செல்ல இந்த நிலை மாறி வியாபாரம் பன்முகப் படுத்தப்பட்டது.

அன்று வேறு பெயரில் இயங்கிவந்த சிலோன் டுபாக்கோ கம்பனி 1930-ம் ஆண்டு யாழ்ப்பாண ஐக்கிய

### வரலாற்றுச் சுருக்கம்

வியாபாரச் சங்கத்திடம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சிகரட் விநியோகத்தை ஒப்படைத்தது. அன்று தொட்டு எமது ஸ்தாபனம் இந்த வியாபாரத்தைச் சிறப்புடன் செய்துவருகின்றது.

1946-ம் ஆண்டு ஓஸ்டின் கார்கள், மொறிஸ்கொமேஷல் வாகனங்களுக்கு யாழ்ப்பாணப் பகுதிக்கு ஏக விநியோகத்தர்களாக எமது ஸ்தாபனம் வாக்கர்ஸ் கம்பனியாரால் நியமிக்கப்பட்டது. 1947-ல் அன்று மிகவும் பிரபல்யம் பெற்ற பிலிப்ஸ் ரேடியோக்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏக விநியோகத்தர்களாக நியமிக்கப்பட்டோம். இவ்வாறு எமது வியாபாரம் பல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களில் எமது ஸ்தாபனம் லீவர் பிரதர்ஸ்,ஷோவலஸ் அன் ஹெட்ஜஸ் லிமிட்டெட், மலிபன் பிஸ்கட் கம்பெனி. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் போன்ற பிரபல்யமான நிறுவனங்களின் முகவர்களாக நியமனம் பெற்ருேம். அண்மையில் இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் விநியோகம் செய்யும் மருந்துவகைகளுக்கு வடபகுதியில் ஒரு மொத்த விற்பனையாளராக நியமனம் பெற்ருேம். சுருக்கமாகச் சொல்வதானல் இன்று எமது ஸ்தாபனம் இலங்கையிற் பிரபல்யம் வாய்ந்த பல கம்பனிகளுடன் ஏதோ ஒருவகையிற் தொடர்புகொண்டு கிட்டத்தட்ட சகல பொருட்களினதும் விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

கம்பனியின் வரலாற்றைக் குறிப்பிடும்போது காலஞ்சென்ற திரு. ச. குலசிங்கம் அவர்களின் பெயரைக் குறிப்பிடாமல் விட்டுவிடமுடியாது. 1942-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முகாமையாளராகத் திரு. குலசிங்கம் பொறுப்பேற்ருர். பதினெட்டு வருடகாலம் வாக்கர்ஸ் அன் சன்ஸ் கம்பனியில் கடமையாற்றியதால் அவர்பெற்ற அனுபவம், தொடர்புகள்

(7-ம் பக்கம் பார்க்க)

- த. சோமசுந்தரம் -
(காரியதரிசி)

## முன்னைநாள் நிர்வாக அதிபரின் ஆசிச்செய்தி

இன்று அறுபது ஆண்டுகள் சேவையைப் பூர்த்தி செய்யும் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த ஸ்தாபனத்துடன் நீண்டகாலமாகத் தொடர்புகொண்டவன் என்ற முறையிலும், சில காலம் அதன் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்களுள் நானும் ஒருவன் என்ற வகையிலும் இன்றைய தினம் எனக்கு ஒரு மகிழ்ச்சிகரமான தினமாக விளங்குவது இயற்கையே.

கடந்த காலங்களில் பல கஷ்டங்களையும், தடைகளையும் கடந்து தனது சக்திக்கேற்ற திறமையுடன் சேவையாற்றிய யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் எதிர்காலததிலும் வெற்றியுடனும், சிறப்புடனும் நேர்மையுடனும் சேவையாற்றும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமுமில்லை.

அதன் சேவைகளுக்கு எனது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

- மா. கனகசபை -
(இளைப்பாறிய பொதுமுகாமையாளர், இலங்கைப்புகையிரத சேவை)

## கூட்டுறவுக் கொள்கையில் தனியார் நிறுவனம்


யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் 1918 ம் ஆண்டு மதிப்பு வாய்ந்த பெருமக்களால் தொடங்கப்பட்டது. அது தனது வெள்ளிவிழா, பொன்விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடி இன்று வைரவிழாவைக் கொண்டாடுகிறது. இது ஒரு சிறுநிறுவனமாகத் தோன்றி ஓங்கி வளர்ந்து இன்று யாவராலும் போற்றிப் பாராட்டப்படும் வியாபார நிலையமாக மிளிர்கிறது. இத்தருணத்தில் இதன் சென்றகாலத்தை நினைவு கூர்வது இதன் வருங்கால வாழ்வுக்குப் பெரிதும் உதவியாக இருக்குமெனக் கருதுகிறேன்.

நேர்மையற்ற வியாபார முறைகள்மூலம் பாவனையாளர் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க வேண்டுமெனக் கருதிய பெருமக்கள் சிலர் சேர்ந்து இந்த நிறுவனத்தைத் தோற்றுவித்தனர். நயத்தை முக்கிய நோக்கமாகக் கொள்ளாத வியாபாரம், பொருள் கொள்ளவருவோரை அன்பாக வரவேற்றல், நிதானமான விலைக்கு விற்றல் ஊழியரை மகிழ்ச்சியோடு செயற்படவைத்தல் என்பவற்ருல் தன்னலமற்ற சேவையாற்றலையே குறிக்கோளாகக் கொண்டனர் இதைத் தொடங்கியவர்கள். இந்த நோக்கங்களை முன்வைத்துச் செயலாற்றிய காரணத்தால் இது விரைவான வளர்ச்சியைப் பெற்றுப் பொதுமக்களுக்கும், பங்காளருக்கும், ஊழியருக்கும் பயனுள்ள சேவைசெய்து மதிப்பு வாய்ந்த வியாபார நிலையமாக விளங்குகிறது.

(7-ம் பக்கம் பார்க்க)

- சி. க. கந்தசாமி -
(நிர்வாக அதிபர்)

## கடந்த பத்து ஆண்டுகளில் ............



# அ.இ.அ.தி.மு.கவிலிருந்து எம்.ஜி.ஆர். லதாவை வெளியேற்றினர்

## கொள்கைக்கு மாருக நடிக்கிருராம்

[தமிழகத்திலிருந்து அந்தனி ஜீவா]

சென்னே, ஆக. 24

அ. இ. அ. தி. மு. க.வை விட்டுச் சினிமா நடிகை லதா நீக்கப்பட்டுவிட்டார். முதன் மந்திரி திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இந்நடவடிக்கையை எடுத்துள்ளார்.

முதன்மந்திரி திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முன்பு சினிமாவில் நடித்துக்கொண்டிருந்த போது அவருக்கு ஜோடியாகப் பல படங்களில் நடிகை லதா நடித்துவந்தது தெரிந்ததே.

'நினைத்ததை முடிப்பவன்', 'பல்லாண்டு வாழ்க', 'மீனவ நண்பன்', 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' உட்படப் பல சினிமாப் படங்களில் எம். ஜி. ஆரின் ஜோடியாக நடித்த லதா, பாண்டிச்சேரியில் நடனமாடித் தேர்தல் பிரசாரம் செய்ததும் தெரிந்ததே.

### நிதி வசூல்

எம். ஜி. ஆர். தலைமையில் லதா பல நடனங்களை ஆடி, அ. இ. அ. தி. மு. க.வுக்கு நிதி திரட்டிக்கொடுத்திருக்கிருர்.

எம். ஜி. ஆர். சினிமாவில் நடிக்கும் வரை அவரது படங்களில் கதா நாயகியாக இவர் நடித்துவந்தார். வேறு படங்களிலும் நடிக்காமல் இருந்தார்

### புதிய கதாநாயகர்கள்

எம். ஜி. ஆர். முதன்மந்திரியானதும் சினிமாவில் நடிப்பதை விட்டுவிட்டார். அதனால் ரஜனிகாந்த், சிவகுமார், ஜெய்கணேஷ் போன்ற கதாநாயகர்களுடன் லதா நடித்துவந்தார்.

### எம். ஜி. ஆர். நடவடிக்கை

இப்போது அ. இ. அ. தி. மு க.வை விட்டு லதாவை நீக்கி, எம். ஜி. ஆர். நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுபற்றி அ. இ. அ. தி. மு. க. அமைப்புச் செயலாளரும், மந்திரியுமான திரு. கே. ஏ கிருஷ்ணசாமி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

### கொள்கைக்கு மாருக...

'செல்வி லதா, அனைத்து இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக்கு மாருகப் பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட பாத்திரங்களில் நடிக்க வேண்டியிருப்பதாலும், அவர் நமது கழகத்திலிருப்பது அவருடைய தொழில் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதாலும், அவருடைய தொழில் நன்மைக்காக நமது கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பிலிருந்து அவரை விடுவிக்கிறோம்.'

## 400 பணயக்கைதிகள் விடுதலை! 60 எம். பிக்கள் காவலில்

### நிகராகுவா அரசு அவகாசம் கோரியுள்ளது

மனகுஹா, ஆக. 24

நிகராகுவா பாராளுமன்றத்தில் பணயக் கைதிகளாக வைத்திருந்தோரில் 60 எம். பி.க்கள் மட்டுமே தொடர்ந்து பணயக் கைதிகளாக உள்ளனர். 400 பேரை பயங்கரவாதிகள் விடுதலை செய்தனர்.

இதேவேளையில் பயங்கரவாதிகளின் நிபந்தனைகளை நிறைவேற்ற நிகராகுவா அரசு 24 மணிநேர அவகாசம் கேட்டுள்ளது.

நேற்று துப்பாக்கிக்காரர்களுக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் இடையே சுமார் ஒரு மணி நேரம்வரை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 4 பேர் கொல்லப்பட்டனர்.

நிகராகுவாவில் உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும், தயகஉ 1கோடி அமெரிக்க டாலரைத் தருவதுடன் பாதுகாப்புடன் நாட்டைவிட்டு வெளியேற தமக்குவசதிசெய்து தருமாறும் 20 பயங்கரவாதிகளும் நிபந்தனை விதித்துள்ளனர். (இ)

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 9-ந் திகதி

வெள்ளிக்கிழமை (25-8-78)

**மேடம்:-** பக்கத்தில் படுகுழி பார்த்திருப்பவர் பகைவர். விழிப்புடன் இருப்பின் வெற்றி உனதே.

**இடபம்:-** வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும், சுப கருமங்களும் நடைபெறும். சுற்றமும் சூழும்.

**மிதுனம்:-** ஆபத்து மிகவும் உண்டு. அடுத்துகெடுப்பவர் அருகிலேயே இருப்பர். எதையும் ஆராய்ந்து பார்ப்பதே நன்று.

**கடகம்:-** புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு. ஆனந்தநிலை.

**சிங்கம்:-** ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். கனிவான பேச்சு, காந்தப் போல்பார்வை கன்னியர் உறவு காதலுக்கும் இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

**கன்னி:-** கன்னல் போல் வாழ்வு. கருத்தினில் காதல் மோகம். மினனல்போல் மறையும் இன்றே வாட்டிடும் பிணியும் தானே.

**துலாம்:-** குளுமையான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். சஸ்திர வழியால் லாபமும் கிடைக்கும்

**விருச்சிகம்:-** எண்ணியதில் தடைகள் தோன்றும் ஏமாற்றம் தாக்கும் நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும் ... னம் நன்று.

**தனுசு:-** இலட்சியப்பாதையில் வெற்றிநடை போடுவீர். உயர்வட்டத்து அன்பும் அவசியம் கிடைக்கும். பதவி உயர்வுக்கும் இடம் உண்டு.

**மகரம்:-** வித்தையில் வெற்றிகாணும். வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள தொடர்புடன் புகழ்வந்து சேரும்.

**கும்பம்:-** இதயத்தில் பூரிப்பு, இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும். கரும்புபோல் இனிக்கும் காரியங்கள் உண்டு.

**மீனம்:-** அற்பவிடயத்திற்கும்ஆத்திரம்அடைவீர் நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடலாம். அடக்கம்வேண்டும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## கலாயோகிக்கு சென்னையில் அஞ்சலி

சென்னை, ஆகஸ்ட் 24

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் 101வது பிறந்த நாளையொட்டி தமிழ்ஆய்வுக்கான நூலை சர்வதேசக்கழகம் வெளியிட்டுள்ளது.

இந்நூலை தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி இன்று வெளியிட்டு வைத்தார், அவர் அங்கு பேசுகையில் பாரதத்தின் கலாச்சாரத் தூதுவராக கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி விளங்கினார் என்று குறிப்பிட்டார்.

மேற்படி நூலைப்பற்றி பல அறிஞர்கள் விளக்கிப் பேசினார்கள்.

## கண்ணன்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உலக மக்களாகிய பசுக்களைக் காப்பவன் நான்தான் என்பதை பசுமாடுகளைமேய்ப்பதன் மூலம் நமக்கு விளக்கிக் காட்டியுள்ளான். இவன்தான் வேணுகோபாலக் கண்ணன்.

### மதன கோபால கண்ணன்

கோபிகாஸ்திரிகளை எல்லாம் ஒருவரை ஒருவர் கண்ணுக எண்ணம் கொண்டு மோகிக்கும்படி செய்து அதைக் கண்டு மகிழ்ந்த மன்மத உருவம் கொண்ட கண்ணன்தான் மதன கோபால கண்ணுவான்.

### சந்தான கோபால கண்ணன்

யசோதையின் மடியில் படுத்தபடி தாய்ப்பாலைக்குடித்துக் கொண்டும் ஒரு கைவிரலால் மற்றப்பாலைக் கிள்ளிக்கொண்டு தாயின் முகத்தைப் பார்த்துப் புன்சிரிப்புடன் அவளை ''புத்திர பாக்கியம் பெற்ற ஆனந்தத்தை எல்லோரும் இங்ஙனம்தான் அனுபவிப்பார்கள்'' என்று உணரச் செய்யும் பால கண்ணன் தான் சந்தான கோபால கண்ணன் ஆவான்.

### தெய்வக்கண்ணன்

உலக மக்கள் உய்ய நம் எல்லோருக்கும் கீதையை உணர்த்துவதுபோல அர்ஜுனனுக்கு உபதேசிக்கும் முகமாக உலக மக்களுக்கு நற்செய்திகளை எழுத்துமூலம் விடுத்துச் சென்ற கண்ணன்தான் தெய்வக்கண்ணனுவான்.

இடபடிப்பட்ட கண்ணனை வருடந்தோறும் அவன் பிறந்த நாளில இரவில் விழித்திருந்து அவன்புகழ்பாடி கொண்டாடி வெண்ணெய், பலகாரங்கள், பழங்கள், அவல் முதலியன வைத்து அவனுக்கு நிவேதனம் செய்து அவன்புகழ் பாடிக்களித்து அவன் திருவருளைப் பெற்று விளங்குவோமாக!!!

— கண்ணனடிமை

## அரிசி ஏற்றுமதி பற்றி அறிவித்த அரசின்

# மா, பாண் விலை அதிகரிப்பு விசித்திரமாக உள்ளது

## கம்யூ., சமசமாஜ கட்சிகள் அறிக்கை

(கொழும்பு)

அரிசியை ஏற்றுமதிசெய்யப் போவதாக அறிவித்துள்ள இந்த அரசு மக்களின் அத்தியாவசிய உணவான மாவின் விலையையும் பாணின் விலையையும் அதிகரித்திருப்பது விசித்திரமாக இருக்கிறது என்று மாஸ்கோசார்பு கம்யூனிஸ்ட்கட்சியும், லங்கா சமசமாஜக்கட்சியும் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளன.

மக்களுக்குத் தேவையான அரிசி குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்று வற்புறுத்தியுள்ள இக்கட்சிகள பொதுமக்களுக்கு ஒருபடி அரிசி ஒருரூபாப்வீதம் வாரத்துக்கு நாலுபடி அரிசி கிடைக்க அரசு உறுதி செய்யவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளன.

சர்வதேச நாணய சபையின் உத்தரவின்படியே இந்த அரசு நடந்து கொள்கின்றது என்றும் பதவிக்கு வந்ததின் பின்னர் மாவின்விலையை 4 தடவைகள் அரசு அதிகரித்துள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளன. (ம)

## பொலிசாரைத் தாக்கிய பெண்கள் கைதியைமீட்டனர்

சென்னை, ஆக. 24

பெண்கள் ஒன்று திரண்டு வந்து பொலிசாரை இரும்புத் தடியால் தாக்கிவிட்டு ஒரு கைதியை மீட்டுக்கொண்டு ஓடிவிட்டார்கள்.

சென்னையில் இந்தச்சம்பவம் நடந்துள்ளது. அது பற்றிய விபரம் வருமாறு:

கடந்தவாரம் கஸ்தூரி எஸ்டேட்டில் ஒரு வீட்டுக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் ஒன்றரை லட்சம் ரூபா ரொக்கமும் 2லட்சம்ரூபா மதிப்புள்ள செக்கும் திருட்டுப் போனது.

ஆந்திராவைச் சேர்ந்த சாராய தொழிற்சாலை அதிபர் ஆதிகேசவலுவின் பணம் அது.

அவர் கொடுத்த புகாரின் பேரில் பொலிஸ் நாய் வந்தது. கைரேகை நிபுணர்கள் வந்து காரில் பதிவாகியிருந்த ரேகைகளை பதிவுசெய்து சென்றனர்.

இது தொடர்பாக பொலிசார் ஒருவரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றபோது இரும்புக்கம்பிகளுடன் அங்கே வந்த சுமார் 10 பெண்கள் உட்பட 25 பேர் பொலிசாரைத் தாக்கிவிட்டு கைதியைமீட்டுச் சென்றனர்.

பின்னர் பொலிசார் குறிப்பிட்ட கைதியை மீண்டும் கைது செய்ததுடன் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் 5 பெண்கள் உட்பட 13பேரையும் கைது செய்தனர். (இ)

### 25 பேர் காயம்

சென்னை, ஆக. 22

சென்னையைச் சேர்ந்த மாங்காட்டில் நேற்று அரிஜனங்களுக்கும் உயர்சாதிக்காரர்களுக்குமிடையில் ஏற்பட்ட கலவரத்தையடுத்து 6 பொலிசார் உட்பட 25 பேர் காயமடைந்தனர்.

உயர்சாதி இந்துக்களுக்குச் சொந்தமான குடிசைகள், வேலைத்தளங்கள், லொறிகள் போன்றவை எரிக்கப்பட்ட சம்பவம்ஒன்றைத் தொடர்ந்து 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## ஏழாலையில் மயானம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை குசத்தியோடை மயானப் புனரமைப்பு வேலையின் இரண்டாவது கட்ட வேலை நாளை அதிகாலை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் சிரமதான முறையில் நடைபெறவுள்ளது.

இச்சிரமதானப் பணியில் ஏழாலையைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களின் தொண்டர்கள் 500க்கு மேற்பட்டோர் கலந்து கொள்வர். இப்பணியை அடுத்து அன்று நண்பகல் மயான மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். (அ)

## இனவாதத்துக்கு எதிராகப் போராடும் சகல சக்திகளுக்கும் எமது ஆதரவுண்டு

### ரஷ்ய ஜனதிபதி செய்தி

மாஸ்கோ, ஆக. 24

''இனவாதத்துக்கு எதிராகவும் சகல இனங்களின் சமத்துவத்துக்காகவும் போராடும் அனைத்து சக்திகளுக்கும் எமது ஆதரவு உண்டு. தென்னபிரிக்காவில் தொடர்ந்துஇனவாத ஆட்சிகள்இருப்பது எவராலும் சகித்துக்கொள்ள முடியாத ஒரு விஷயமாகும்'' இவ்வாறு ரஷ்ய ஜனதிபதி திரு. லியோனிட் பிரெஷ்னேவ் இனவாதத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக சர்வதேசமகாநாட்டுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமது செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''தேசிய விமோசனத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்குமாகப் போராடும் மக்களுக்கு ஆதரவு வழங்குவது சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை அம்சங்களில் ஒன்ருகும். தமது தலைவிதியினைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும் மீறவொண்ணு உரிமை ஒவ்வொரு இனத்துக்கும் உண்டு. தமதுசட்டபூர்வமான அடிப்படை உரிமைகளுக்காக ரொடீஷிய, நமிபிய மக்கள் போராடி வருகின்ற ஒரு சூழலில் ஆபிரிக்க விவகாரங்களில் நேட்டோ நாடுகள் தலையீடு செய்வது அநியாயமானதாகும். இது உலக சமாதானத்துக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் உள்ளது. (இ)

# கூட்டுறவுக் கொள்கையில்........

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் ஒன்றுபட்டுப் பயனுள்ள முயற்சிகளில் ஈடுபட்டுழைப்பதைக் கூட்டுறவு இயக்கம் என்பர். இக் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்வது யாழ்ப்பாண ஐக்கிய வியாபரச் சங்கம். கூட்டுறவு இயக்கத்துக்குரிய கொள்கைகளையும், நோக்கங்களையும் கொண்ட கூட்டுறவு தனியார் நிறுவனமாக இயங்குவது இதன் முறையான வளர்ச்சிக்கு ஏதுவாயிருக்கின்றது. இபபொழுதுள்ள அரசாங்கத்தின் கொள்கை, அரசாங்கத்துறையும் தனியார் துறையும் வளர்ச்சியடைந்து பொதுமக்களுக்குப் பணியாற்றவேண்டும் என்பதாகும். இரு துறைகளையும் உள்ளடக்கியதாக எமது நிறுவனம் விளங்குகிறது. இப்படியொன்று இலங்கையில் வேறெங்குமில்லையென்றே சொல்லலாம். அத்துடன் இது கூட்டுறவுக் கொள்கைகளைத் தாங்கிய பரந்த அடிப்படையிலான வரையறுக்கப்பட்ட பொறுப்புகளையுடைய பொது வர்த்தக நிறுவனமாக விளங்குகிறது. ஆகவே அரசாங்கம் இதை உணர்ந்து எமக்கு வேண்டிய உதவிகளை வழங்கி எமது சேவையைப் பெருக்குவதற்கு ஆவன செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

வர்த்தகத்தில் அனுபவம் பெற்று வல்லுநராக விளங்கிய திருவாளர் ச. குலசிங்கம் அவர்கள் முகாமையாளராகவும், நிர்வாக அதிபராகவும், பெற்றமை இந்நிறுவனத்தின் பெரும்பாக்கியமாகும். அதன் விரைந்த வளர்ச்சிக்கும், மேலான சேவைக்கும், அவரின் மதிநுட்பமும், நிர்வாகத்திறனும், வர்த்தக அறிவும் காரணமாயிருந்தன வென்றால் அது மிகையாகாது. யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கமும், அதனோடு தொடர்புடையோரும் அப்பெருமகனுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர் காட்டிய வழிகளைப் பின்பற்றி அவரால் உருவாக்கப்பட்டவர்களாலே தான் இவ் வர்த்தக நிறுவனம் தொழிற்படுகிறது. அவர்களுள் ஒருவரான திருவாளர் த. சோமசுந்தரம் சென்ற முப்பத்திநான்கு ஆண்டுகளாக இந்நிறுவனததில் பல நிர்வாகப் பதவிகளை வகித்துஇப்போ சிலவருடங்களாக காரியதரிசி/ முகாமையாளராகக் கடமையாற்றி வருகிறார். தொன்று தொட்டு இடையறாது இந்த ஸ்தாபனத்திற்கு அவர் ஆற்றி வரும் அருந்தொண்டு இணையற்றதாகும். எமது நிறுவனத்துடன் பல்லாண்டுகளாகத் தொடர்புகொண்டுவரும்இலங்கையிலுள்ள பல பிரபல்ய வர்த்தகஸ்தாபனங்களும் திரு. சோமசுந்தரம் அவர்களையே எமது நிறுவனத்தின் அச்சாணியாகக் கருதுகிறார்கள். காரியதரிசி / முகாமையாளராக ஆற்றிவரும் மகத்தான சேவையின் பலனாக அவர் எமது நிறுவனத்திற்குள் ஒரு ஸ்தானமாக விளங்குகிறார். அவரின் அரிய சேவையை இந்த வேளையில் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

திருவாளர் குலசிங்கம் அவர்களுக்குப்பின் நிர்வாக இயக்குநராகப்பொறுப்பேற்ற பெரியார் திரு மா. கனகசபை அவர்கள். அவர் புகையிரத சேவையில் உயர்ந்த நிர்வாகப் பதவியை வகித்தவர் அக்காலத்தில் நிர்வாகத் திறமையில் அவருக்கு அவரே நிகராக விளங்கியவர். நிர்வாக இயக்குநராக வந்து அப்பதவிக்கும், ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கும் பெருமையளித்தவர். நிர்வாகத்தில் புதுமுறைகளை புகுத்தித்திருத்தியமைத்ததோடு வர்த்தகத்தையும் பன்முகப்படுத்தியவர். யாழ்ப்பாண ஐக்கிய விவாபாரச் சங்கத்திற்குப் பேரும் புகழும் தேடித்தந்தவர்.

எமது நிறுவனத்தின் பாதுகாவலராகத் திகழ்பவர்கள் இயக்குநர்சபை உறுப்பினர்கள். ஆழ்ந்த அறிவும், பரந்த அனுபவமும், உயர்ந்த நோக்கமும் கொண்ட இவர்களின்கண்காணிப்பில் இந்நிறுவனம் நடைபெற்று வருகிறது அவ்வப்போது தோன்றும் இடையூறுகள் சங்கத்தைப் பாதிக்காதவாறு பாதுகாத்து வருகிறார்கள். சென்ற பத்து ஆண்டுகளில் நாம்பல இன்னல்களை எதிர்நோக்கவேண்டியிருந்ததால் அவை நிறுவனத்தைத்தாக்காதவாறுவேண்டிய பரிகாரம் தேடியவர்கள் இந்தஇயக்குநர்கள். இச் சபையின் தலைவராக விளங்குபவர் வைத்திய கலாநிதி க. கனகரெத்தினம் அவர்கள். தமது பிரியமான குழந்தையாக இந்நிறுவனத்தைக் கருதி இதை கண்ணை இமை காப்பது போல் காத்துவருகிறார். வைதியப்பகுதியில் உயர்ந்த பதவிகளை வகித்த இவர் அடபோதும் இப்போதும் சமூக சேவையில் ஈடுபாடுடையவர் என்பதை யாவரும் அறிவர். ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தலைவராயிருந்து சென்ற பதினேழு ஆண்டுகளாக இந்நிறுவனத்தின் நலனுக்காக அயராது உழைத்து வருகிறார் அவர் இன்னும் பல்லாண்டுவாழ்ந்து இந்நிறுவனத்திற்கும், சமூகத்திற்கும் சேவையாற்றவேண்டுமென்று விரும்புகிறோம்.

இந்நிறுவனத்தில் கொள்கைகள் அதன் உயிர், இதைக் கொண்டு நடாத்தும் ஊழியர்கள் அதன் உடல். ஒவ்வோர் உறுப்பிலும் உயிர்செறிந்திருப்பதுபோல் எமது தொழிலாளர் ஸ்தாபனத்தின் நோக்கங்களை உணர்ந்து அதன் பாரம் பரியத்தைப்பேணி நிர்வாகத்தோடு ஒத்துழைத்து வருகிறார்கள். பல்வேறு நிலைகளிலுமுள்ள எமது தொழிலாளர் அனைவரினதும் மனமார்ந்த ஒத்துழைப்பே இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கும பெருமைக்கும் காரணமாயிருக்கின்றது. அவர்களுக்கு எமது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றேன். அவர்கள் தொடர்ந்து உயர்ந்த தொண்டாற்றி இந்நிறுவனத்தை வளர்ப்பார்களென்பது எனது திடமான நம்பிக்கையாகும்,

இவ்வளவு காலமும் எமக்கு ஆதரவளித்த வாடிக்கையாளர் சகலருக்கும் எமது நன்றியைக் கூறுவதுடன், மேலும் தொடர்ந்து தங்கள் பூரண ஒத்துழைப்பையும், ஆதரவையும் எமக்குத் தர இம் மகிழ்ச்சிகரமான தினத்தில் அவர்களை வேண்டுகிறோம்.


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஆர். ராதா - பத்மினி
சித்தி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
30 WINCHESTER
(Western film)

REGAL Jaffna 2nd POPULAR W
Phone: 360
Daily 10-30 a. m., 2-00, 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வின்ஸர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ் - நகர்)
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம் நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம் ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு
நடித்த
மகாதேவி [புத்தம் புதிய பிரதி]

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
வளர்பிறை

லிடோ போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
(யாழ் நகர்)
தீர்க்க சுமங்கலி

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி - தேவிகா
நடித்த
ஆடிப்பெருக்கு
(புதியபிரதி)

ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)


## வர்த்தக...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யாகாது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்புறமாக ஒரு துண்டுக்காணியை வாங்கி, அதில் பிரமாண்டமான கட்டிடத்தை கட்டியெழுப்பிய பொறுப்பும், பெருமையும் அவருக்கே சாரும். கட்டிடம் அமைந்திருக்கும் இடம் மக்களின் பல்வேறு பிரிவினரும் வந்துபோகக்கூடியதாக அமைந்துள்ளதால் வியாபாரப் விருத்தியடைவதற்கு ஏதுவாக அமைந்தது.

திரு. குலசிங்கம் அவர்களின் நேர்மையான, விஸ்வாசமான சேவையை அவதானித்த பங்காளர்கள் அவரை நிர்வாக அதிபர் பதவிக்கு உயர்த்தினர். அவர் இறக்கும்வரை இப்பதவியை சிறப்புடன் வகித்துவந்தார்.

இவரின் எதிர்பாராத மறைவால் துயருற்றிருந்த ஸ்தாபனம் இலங்கைப் புகையிரத சேவையின் பொது முகாமையாளராகக் கடமையாற்றித் திறமைமிக்க நிர்வாகியாக விளங்கிய திரு மா. கனகசபை அவர்களை நிர்வாக அதிபர் பதவியை ஏற்கச்செய்வதில் வெற்றிகண்டது.

அரசாங்கத்தின் மூலமாகப் போதிய பாவனைப் பொருள்களைப் பெறமுடியாமற்போன காரணத்தால வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு இவர் பல புதிய வழிகளைக் கையாண்டார். ஒரு நடவடிக்கையாக சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் கிளைகளை நிறுவ ஏற்பாடு செய்தார், இதன் காரணமாக சிகரெட், பிஸ்கட், பேப்பர், லொத்தர் சீட்டு, ரயர், றேடியோ, பட்டரி, உழவுயந்திரம் என்பனவற்றின் வியாபாரம் அதிகரித்தது.

சென்ற அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இதில் பல பொருள்களை முற்றாகவோ அல்லது ஒருபகுதியையோ பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. எவ்வாறாயினும் மொத்தத்தில் வியாபாரம் அதிகரித்தது. அதே சமயம் வரிகளும், ஊழியர்களுக்கான சம்பளமும் பெருமளவில் அதிகரித்தது இதன் காரணமாக கடந்த சிலஆண்டுகளில் சொற்ப இலாபத்தையே பெற முடிந்தது.

திரு. கனகசபை இளைப்பாறியதைத் தொடர்ந்து முன்பு கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக விளங்கிய திரு. சி. க. கந்தசுவாமி அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். எதிர்பாராத பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளபோதும் கல்லூரி அதிபராகப் பெற்ற புகழுக்கு ஏற்றாற் போல ஸ்தாபனத்தையும் சிறப்பாக இயக்கிவருகின்றார்.

மிகவும் உற்சாகத்துடன் தற்போதய ஊழியர்கள் செயலாற்றிவருவது மிகவும் திருப்தி கொள்ளக்கூடிய தொன்றாகும்.

நேர்மைக்கும, சேவைக்கும் எடுத்துக்காட்டாக யாழ்ப்பாண ஐக்கியவியாபாரச் சங்கம் தொடர்ந்தும் விளங்கும் என்பதில் எதுவித ஐயப்பாடும் எனக்கில்லை.

## மக்கள்சேவை...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

என்பன எமது ஸ்தாபனத்தை சரியாக வழிநடாத்துவதற்குப் பெரும் துணையாக விளங்கியது. அவர் மிக மிகக் கண்டிப்பானவர். ஆனால் இரக்க சிந்தையுடன் தொழிலாளர்களின் பிரச்னைகளை அணுகினார். அவரின் சிறப்பான நடைமுறை காரணமாக 1953-ம் ஆண்டு கம்பனியின் முதலாவது நிர்வாகஅதிபராக நியமிக்கப்பட்டார். அவர் இறக்கும்வரை இந்தப் பதவியை வகித்தார்.

திரு. குலசிங்கம் அவர்கள் காலமானதைத் தொடர்ந்து, இலங்கை புகையிரதப் பகுதியின் பொதுமுகாமையாளராகவிருந்து இளைப்பாறிய திரு. மா. கனகசபை அவர்கள் நிர்வாக அதிபர் பதவியைப் பொறுப்பேற்றார். அரசாங்க சேவையில் சிறந்த நிர்வாகி எனப்பெயர்பெற்ற இவரது நிர்வாகத்தில் கம்பனி பல புதிய முயற்சிகளில் வெற்றியுடன் ஈடுபட்டது.

திரு. கனகசபை அவர்கள் பல்வேறு சொந்தக் காரணங்களுக்காக 1973 பிற்பகுதியில் பதவியிலிருந்து இளைப்பாறினார். அதன்பின் அப்பதவியை கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சி. க. கந்தசுவாமி அவர்கள் பொறுப்பேற்று நடாத்திவருகிறார். அவரது நிர்வாகத்தில் மேலும் பல முன்னேற்றங்களை எதிர்பார்க்கிறோம்.

ஸ்தாபனத்தின் துரிதவளர்ச்சிக்கு தொழிலாளர்களின் கடின உழைப்பும் ஒத்துழைப்புமே மூலகாரணமாக விளங்கியது. அவர்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்திலும் ஸ்தாபனம் பல துறைகளிலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கிறோம்.

## இறங்கவேண்டிய இடம் தவறியதால் ஏற்பட்ட கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

உத்தரதேவி கிளிநொச்சி ரயில்நிலையத்தில் அவசரமாகப் புறப்பட்டுவிட்டதால், கிளிநொச்சியில் இறங்கவேண்டிய 6 பிரயாணிகள், மாங்குளத்தில் இறங்கியதுடன், அபராததொகையையும் செலுத்தினர்கள்.

கடந்த சனிக்கிழமை நண்பகல் உத்தரதேவியில் யாழ்ப்பாணத்திலிருந்து, கிளிநொச்சிக்கு சென்ற ஒரு குடும்பத்தினருக்கே இந்த நிலைமை ஏற்பட்டது.

தாங்கள் இறங்குவதற்கு முன்னரே ரயில் புறப்பட்டுவிட்டதால் மாங்குளம் சென்று, அங்கிருந்து பின் கிளிநொச்சி வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். (சு)

## கூட்டணி நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மண் காக்கும் இயக்கத்துக்கென தமிழர் விடுதலைக் கூட்டணியினர் செப்டம்பர் முதலாம் திகதிமுதல் வீடு வீடாக நிதி திரட்டுவர்.

ஆவரங்கால் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி, இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது

சகல தொகுதிகளிலுள்ள மூலக்கிளைகளும் இம்மாதம் 26ந் திகதிக்கு முன் கூட்டப்பட்டு இதற்கான பணியினை ஆரம்பிக்குமாறு தமிழர் விடுதலைக்கூட்டணி துணைச்செயலாளரும், காவலூர் எம். பி. யுமான பண்டிதர் திரு கா பொ. இரத்தினம் கேட்டுள்ளார்.

சேகரிக்கப்படும் நிதி காலக்கிரமத்தில் பொருளாளருக்கு அனுப்பப்படவேண்டுமென கேட்டுள்ளார் (செ)

# புங்குடுதீவில் நாளை நடைபெறும் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கலைப்பெருமன்றம், அம்பலாவணர் அரங்கு முதலாவது ஆண்டுவிழாவில் தமிழக கிளாரினற் வித்துவான் ஏ. கே. ஸி. நடராஜவின் கிளாரினற்கச்சேரி இடம் பெறவிருக்கிறது யாழ்ப்பாணத்துத் தமிழ்வித்துவான்களான திருவாளர்கள் சின்ன கிருஷ்ணன், என். சின்னராசா, கெ. கணேசபிள்ளை ஆகியோர் தவில்வாசிப்பார்கள்.

நாளை சனிக்கிழமை மாலை அம்பலவாணர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவிற்கு யாழ். வளாக புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் சோ. செல்வநாயகம் தலைமை வகிப்பார். மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ரி. ஜே. இராஜரத்தினமும் பாரியாரும் பிரதம விருந்தினராக கலந்துகொள்வர். தொகுதி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் வாழ்த்துரைவழங்குவார்.

இணுவை சந்தான கிருஷ்ணன் குழுவினரின் மங்கள வாத்தியத்துடன் ஆரம்பிக்கும் இவ்விழாவில்நடனகலாஜோதி திருமதி கல்யாணி சுந்தரலிங்கத்தின் பரதநாட்டியம், சங்கீதபூஷணம் பொன், சுபாஸ் சந்திரனின் இசைவிருந்தும், நடிகமணி வி. வி. வைரமுத்து - கலைமணி வடிவேல் இணைந்து நடிக்கும் 'பக்த நந்தனர்', புங்குடுதீவு கவின்கலை மன்றத்தின் 'சிதைந்தவாழ்வு' முதலிய நாடகங்களும் இடம் பெறும்.

பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை, திரு. என். கே. மயில்வாகனம், திரு. வி. இராமநாதன் ஆகியோர் பாராட்டப்படுவர்.

வித்துவான் சி. ஆறுமுகம், மன்றத்தலைவர் சங்கீதபூஷணம் க. தாமோதரம்பிள்ளை, செயலாளர் திரு. மு. இராமலிங்கம் ஆகியோர் உரையாற்றுவர். (அ)

## கூட்டணி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

''தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்துறையை வளர்க்க வேண்டுமெனத் 'தமிழ்க்காங்கிரஸ் 20 ஆண்டுகளுக்கு முன் மூன்று பெரும் தொழிற்சாலைகளை அமைத்ததுடன் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து படித்த வாலிபர்களுக்கு வாழ்வழித்தது. அப்பொழுதெல்லாம் அதனை எதிர்த்து பிரசாரம் செய்தவர்கள் இன்று பொருளாதாரத்தை வளர்ப்போம் தமிழ் மண் காப்போம்'' என்கிறார்கள்.

### தமிழ் இளைஞர்கள் வேலை இழப்பு

''இன்று கூட தமிழ்வாலிபர்கள், தாங்கள் பெற்ற வேலைகளை இழந்துகொண்டு வருகிறார்கள். சிமெந்துத் தொழிற்சாலையில் சில தமிழ் இளைஞர்கள் வேலைபெற்றார்கள். கூட்டணியினர் ஆட்சேபம் தெரிவித்ததால் சுமார் 150 தமிழ்இளைஞர்கள் வேலை இழந்தனர். இலங்கை போக்குவரத்துச்சபையில் வடபகுதித் தமிழ்இளைஞர்கள் வேலை பெற்றனர். கூட்டணியினர் ஆட்சேபித்ததினால் அவர்கள் வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளனர். தமிழ்இளைஞர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தமிழர்கள்தான். ஆதலால் இனிமேலாவது கூட்டணியினர் தமிழ்இளைஞர் வேலைவாய்ப்பில் கைவைக்காமல் இருக்கவேண்டும்''

வாலிப முன்னணிச் செயலாளர் திரு. என். ஆனந்தராசா பேசுகையில் கடந்த அரசின் காலத்திலிருந்த தரப்படுத்தலை ஒழிக்கப்பட்ட போதிலும், இன்று வடபகுதியில் வேலைவாய்ப்பில் தரப்படுத்தல் இருந்துவருவதாக கூறினார். திறமைசாலிகளுக்கு இடமில்லாமல் எம். பியின் சிபார்சில் வேலை வழங்கப்படுவதாகவும் கூறினார்.

வடபகுதி இளம்விவசாயிகள் மீண்டும் மிளகாய்ச் செய்கையில் அக்கறைகாட்ட அரசு மிளகாய்க்கு 12 ரூபா உத்தரவாதவிலையாக்க வேண்டும் என்றார். (க-அ)

## தகவல்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அநேகமாகத்' திரைப்பட விழா என்று சொல்லும் போது கொழும்புமாகரிலேயே பெரிதும் ஒழுங்குசெய்யப்படுகின்றது. இவ்விதமான விழா மாகாண அடிப்படையில் ஒழுங்குசெய்வது மிக அரிது.

இக்குறையை நீக்கி யாழ். மாவட்ட கலாச்சாரமன்றம் இவ்விழாவை ஒழுங்கு செய்திருப்பது இக்காலகட்டத்திற்கு ஏற்ற முக்கிய செயலாகக் கருதலாம்.

வெவ்வேறு மொழிகளில் அமைந்த சிறந்த திரைப்பட கோர்வையை இத் திரைப்பட விழாவில் தொடராகக் காண்பதற்கு ரசிகர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது'

உயர்ந்த திரைப்படம் ஒன்றன்மூலம், ரசிகர்கள், கலைரசனையைப் பெறும் அதே வேளையில் கலாச்சார ரீதியான சமுதாய ஆய்வினையும், விழா எமக்குளடுத்துக்காட்டுகின்றது மற்றக் கலைப்படைப்புகளையும் போலவே திறமையான திரைப்படம் காலம், தேசம் இனம்என்றகுறுகிய காலஎல்லைகள் எல்லாவற்றையும் தாண்டி நிற்பதனால் கலா ரசிகர்கள் இவற்றை பரந்த நோக்கோடு ரசிக்கலாம்.

எந்த நாட்டில் எப்பாஷையில் படைக்கப்பட்டாலும், தரமான திரைப்படமென்றால் அதை ரசிப்பதற்கு எந்த விதமான தடையும் கிடையாது. அதைப் போலவே, திரைப்படங்களில், கையாளப்படும் சமூதாய ஆய்வு, சமுதாயத்திலுள்ள மனிதப் பிரச்னைகளை அனுதாபத்துடன் நோக்குவதற்கு வாழ்க்கையில் எல்லாருக்கும் ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது.

ஆகவே தாம் வாழும் தத்தம் சமுதாயத்தை மட்டுமன்றி வெவ்வேறு கலாச்சாரமுள்ள சமுதாயங்களின் பிரச்னைகளையும், இக்கலைக்கண் மூலம் கண்டு களிப்பதற்கு, இவ்விழா தகுந்த சந்தர்ப்பத்தையளித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும், இத்திரைப்படவிழா அதன் குறிக்கோள்களில் வெற்றி பெற்று சகல விதத்திலும் நன்மையளிக்க வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன்.

திரு. டி. பி. விஜயதுங்க (தகவல் ஒலிபரப்பு அமைச்சர்)

## ஓம் எனும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மன்னனின் செம்மை சான்ற சிவப்பணியின் சிகரமாகத் தஞ்சைப் பெரிய கோயில் விளங்குவதை இன்றும் காணலாம்.

அக்காலத்தே ஆலயங்களில் திருப்பதிகம் ஓதும் வழக்கம் முக்கியத்துவம்பெற்று வந்ததென்பதும், தஞ்சைப் பெரிய கோயிலில் திருப்பதிகம் ஓதுவதற்கு இராஜராஜ சோழன் விரிவான ஒழுங்குகளைச்செய்து வைத்தான் என்பதும் சாசனவாயிலாக நன்கறியக்கிடக்கின்றது. திருப்பதிகம் ஓதுவது என்ற பிற்கால வழக்குக்குப் பதிலாகச் சாசனத்தில் 'திருப்பதியம் விண்ணப்பம் செய்வது' எனவும், ஓதுவார் என்பதற்குப் பதிலாகப் பிடாரர் எனவும் சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பதிகங்கள் ஓதுவதற்கு நாற்பத்தெட்டுப் பேரையும், மத்தளம் உடுக்கை வாசிப்பதற்கு இருவரையுமாக மொத்தம் ஐம்பதுபேரைத் தஞ்சாவூர்க் கோயிலுக்கு மாத்திரம் இராசராசன் நியமித்தான் இவ்வைம்பது பேரின் பெயர்களும் சாசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஒவ்வொருவருக்கும் தீட்சா நாமங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தீட்சை பண்ணப்பட்டவர்களே திருப்பதிகம் ஓதிவந்தனரெனக் கொள்ள இடமுண்டு. மேலும் திருக்கோயில்களில் இறைவன் திருமுன்னே மத்தளம், சாரங்கி முதலிய துணைக்கருவிகளுடன் பாடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வந்ததென்பதும் நன்கு அறியப்பெறும்.

(வளரும்)

## தேசிய...

[4-ம் பக்கத் தொடர்ச்சி[

லிருந்து விலகி புதிய உத்திகளுடன் உண்மையான வாழ்க்கைக் கதைகளைப் படமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எம்மவரிடையே நற்குணங்களும் தீயகுணங்களும் உண்டு. உணர்ச்சிவசப்பட்டு உவகை கொள்வதும் 'துக்க மேலீட்டால் கண்ணீர் வடிப்பதும் எல்லோருக்கும் சகஜம். ஆனால மனிதனுக்கு மனிதன் உணர்ச்சி வேறுபடுகிறது. சிறந்த திரைப்படமாயின் சமூகக் கோட்பாட்டிலே அமைந்த உணர்ச்சிகளை எடுத்துக்காட்டும்விதத்தில் அமைய வேண்டும். கலை கலாச்சாரம் போன்ற சமூகப் பண்புகள் ஒரு நாட்டுக்குத் தனிப்பட்ட தொன்றன்று. அது எல்லைகளைக் கடந்த சாதி, மத பேதங்களை வென்று ஓங்கி நிற்பதாகும். ஆகவே கலை, கலாச்சாரம் என்பது ஒரு தனிப்பட்ட மனித குழுவினருக்கு மட்டும் சொந்தமானதன்று. அது எல்லாச் சாதி' சமய மக்களாலும் அனுபவித்து ரசிக்கவேண்டிய தொன்று. கலையியின் அதியுன்னத பிரதிபலிப்பே திரைப்படமாகும். ஒரு தேசத்தின் கலை வளர்ச்சி, அனுபவ முதிர்ச்சி சினிமாவில் பிரதிபலிக்கிறது. மேலநாட்டு, அல்லது கீழ்நாட்டு திரைப்படமென்று வேறுபாடு காட்டாது' அவை ஒரு சமூகக் கோட்பாட்டை எடுத்துக்கூறுவதாக அமையும்பொழுது அவற்றை நாம் அனுபவித்து ரசிக்கவேண்டும்.

ஆகவே இந்நோக்கத்தையும் கொள்கையையும் பரப்பும் பொருட்டே இந்தத் திரைப்படவிழாவிலே காட்டவிருக்கும் படங்களை யாழ். மாவட்ட கலாச்சார மன்றம் மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றது. இவ்விழாவின் வெற்றி வந்து பார்வையிடும் கூடுதலானோரில் தங்கியிராதுஇவ்விழாவின் உள்நோக்கான கலாச்சார இணைப்பை உணர்ந்துகொள்ளும் அந்தச் சிறு தொகையினரிலேயே தங்கிருக்கிறது.

## அமைச்சருக்கு பரு. எம். பி.யின் அவசரத் தந்தி

''மூன்று ரூபாய்க்கு நல்லரக அரிசியை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க முடியுமானால் உடனடியாக பருத்தித்துறைக்கு வாரத்துக்கு 300 மூடை அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கவும்'' எனக் கோரும் அவசரத் தந்தியொன்றை உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹெரத்துக்கு பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம் அனுப்பியுள்ளார்.

நேற்றைய தினம் பத்திரிகைகளுக்கு அமைச்சர் ஹெரத் விடுத்த செய்தியையடுத்தே பருத்தித்துறை எம். பி. மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார். (கெ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே, யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென். மேரிஸ் 'ஏ' பிரிவுக் கழகமும் இன்று மோதுகின்றன.

## கண்டெடுக்கப்பட்டது!

2 பங்கீட்டுப் புத்தகங்களும் பங்கீட்டு அட்டையும் அடங்கிய பாக் ஒன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் ஓட்டோஸ் பெற்றோல் நிலையம் முன்பாக ந. நவகுமாரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## ஆஸ்பத்திரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ச்சை பெறுபவர்களுக்கு இனிமேல் விசேட சத்திரசிகிச்சைக்கு 250 ரூபாவும் நடுத்தர சத்திரசிகிச்சைக்கு 150 ரூபாவும், சிறிய சத்திரசிகிச்சைகளுக்கு 100 ரூபாவும் அறவிடப்படும். இதைவிட நாளாந்தம் 3 ரூபா அறவிடப்படவுள்ளது.

கொழும்பு மேர்ச்சண்ட் வார்ட்டில் தங்கும் சிறுவர்களிடம் 60 ரூபா கட்டணம் அறவிடப்படும். ஏனைய இடங்களில் முதல்தர வார்ட்டுகளுக்கு 45 ரூபாவும் 2-ம் தர வார்ட்டுகளுக்கு 20 ரூபாவும் அறவிடப்படும். (இ)

## இது பொய்த்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சள் எனக் கூறப்படுகிறது.

சயிக்கிளில் சாரம் அணிந்த இரு இளைஞர்கள் வந்தார்கள் என்றும், ஒருவர் கிளை முகாமையாளரிடம் 'டோர்ச்லைற்' இருக்கிதறா என்று கேட்டபோது இல்லை என முகாமையாளர் பதிலளித்ததும், அவர் அல்மேராவில் உள்ள சாமான்களைப் பார்த்துக்கொண்டிருந்ததாகவும், இச்சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது.

உடனே மற்ற இளைஞர் துப்பார்க்கியைக் காட்டி பயமுறுத்தி அதனைக் கழட்டிக் குண்டுகளைக் காட்டியபின் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

வெளியில் வந்ததும் வானத்தை நோக்கி ஒரு தடவை சுட்டுவிட்டு சயிக்கிளில்சென்றுவிட்டார்களென்றும் கூறப்படுகிறது.

இளைஞர்கள் இருவரும் தலையை பொலிஸ் குரோப் அடித்திருந்தனர் என்றும், ஒருவர் நீலசேட்டும், மற்றவர் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார்களென்றும் கூறப்படுகிறது.

இளைஞர்கள் கொள்ளையடித்துச்சென்றபின் கிளையில் 10 ரூபா 51 சதம் மட்டும் மிச்சமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

கோப்பாய்ப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (சு)

## சுவீப் முடிவுகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 25 O 0349 | 05 P 0567 |
| 02 Q 0634 | 13 Q 0401 |
| 11 Q 0231 | 11 R 0141 |
| 34 R 0718 | 21 R 0257 |
| 36 R 0479 | 31 S 0937 |
| 01 S 0312 | 19 S 0094 |
| 20 S 0821 | 12 S 0405 |
| 25 T 0202 | 02 T 0334 |
| 20 T 0239 | 29 T 0396 |
| 32 T 0734 | 07 U 0690 |
| 16 U 0519 | 05 U 0294 |
| 34 U 0929 | 29 U 0581 |
| 20 U 0812 | 02 U 0576 |
| 08 V 0744 | 15 V 0012 |
| 10 V 0771 | 21 V 0838 |
| 05 V 0049 | 23 V 0382 |
| 30 V 0886 | 12 W 0707 |
| 11 W 0250 | 10 W 0323 |
| 06 W 0644 | 04 W 0208 |
| 19 W 0257 | 32 X 0107 |
| 16 X 0840 | 06 X 0995 |
| 19 Y 0625 | 16 Y 0068 |
| 27 Y 0709 | |
| 19 Y 0635 | 16 Y 0068 |
| 27 Y 0709 | 23 Y 0310 |
| 15 Z 0952 | 21 Z 0659 |
| 22 Z 0496 | 21 Z 0778 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

## சாந்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாராச்சிப் பகுதிக்கும் விஜயம் செய்வார்,

நாளை சனிக்கிழமை சாலை யாழ். மாவட்ட கலாசார மன்றத்தினரால் நடாத்தப்படும் சிறுகதைப் போட்டியில் வெற்றியிட்டியோருக்கான பரில்களை வழங்குவார். நண்பகல் கொழும்பு திரும்புவார்.

## நடராஜன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜயாக்கண்ணு தேசிகரின் பிள்ளைகளான செல்வி நர்மதா, செல்வி சோமசுந்தரம் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், விசேஷ தவில் நாதஸ்வரக் கச்சேரிகளும் விழாவில் இடம் பெறும். சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார். (அ)

## ராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள மக்கள் 25 வீதம் குடியேற்றப்படவேண்டும், யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த நிலையங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் தமிழ்-சிங்களப் பாகுபாடு இன்றி நாடு முழுவதும் எல்லாரும் வாழவேண்டும் என்றார்.

சட்டத்தரணி குணதிலக்காவின் குறுக்கு விசாரணையில் அவர் கூறியதாவது:

இலங்கையின் ஜனத்தொகையில் 5 வீதமானவரே யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். அப்படியானால் தெகிவலையிலுள்ளவர்களும் தனிநாடு கோரலாம்.

சட் அன்டவூட் ஆட்சேபிக்கவில்லை.

சாட்கி: தமிழர்விடுதலைக்கூட்டணி தேர்தல் கூட்டங்களில் பேசியதுபற்றி நவம்பர் 21ம் திகதி 77ம் ஆண்டு அமைச்சர் பிரேமதாஸாவின் அறையில் வைத்து கைத்தொழில்அமைச்சர் சிறில் மத்தியூவிடம் கூறினேன். பிரதமர் ஜே. ஆர் ஜயவர்த்தனாவிடமும் கூறமுன்றேன். அவர் கேணல் தர்மபாலாவிடம் கூறும்படி சொன்னார்.

கூட்டங்களில் சிங்களவர்கள் கொல்லப்பட்டு மரங்களில் தொங்கவிடப்படுவதாகவும் பிரசாரம் செய்தனர். இவை வதந்திகள் அல்ல, திட்டமிட்டு சிங்களவரை யாழ்ப்பாணத்திலிருந்து கலைப்பதற்காக நடந்த பிரசாரமாகும்.

கூட்டணித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமரசேகரபுரமென்ற பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் அப்படியொரு பகுதி இல்லை. மணியம் தோட்டம் என்ற பெயர்தான் உண்டு. (ம)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka